விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 21 திங்கட்கிழமை (07.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 353




# ஐக்கிய தேசிய கட்சிக்குள் கருத்து முரண்பாடு

# மகிந்தவை சந்தித்தார் எஸ்.பி.திஸாநாயக்க



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான எஸ்.பி.திஸாநாயக்க நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் யாரும் போட்டியிடாமல் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தமை குறித்து அதிருப்தி கொண்ட அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பகைத்துக் கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)



## பிரி., நோர்வே தூதுவர்கள் இன்று யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரித்தானிய, நோர்வே நாட்டுத் தூதுவர்கள் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

யாழ்ப்பாணத்திற்கு இன்று காலை 9.00 மணிக்கு வருகை தரும் தூதுவர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (ந-3)

## ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க நான்கு வெளிநாட்டு அமைப்புக்கள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது நான்கு வெளிநாட்டு கண்காணிப்புக் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ஐக்கியத்தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் நோக்கில் நான்கு வெளிநாட்டு கண்காணிப்புக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள தாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதில் ஐக்கிய (16ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவின் கொள்கையை மக்களுக்குத் தெளிவு படுத்துவோம்

### ரவூப் ஹக்கீம் தகவல்

(கொழும்பு)

அரசின் நடவடிக்கைகளை முஸ்லிம் மக்கள் தெளிவாக புரிந்து வைத்துள்ளனர்: சிறுபான்மை மக்கள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் இருக்கக் கூடியநிலைப்பாட்டை அரசு திரிபுபடுத்தி கூறிவருகின்றது.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசார ஊடக மத்திய நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே (16ஆம் பக்கம் பார்க்க)

## நிதி சேகரிப்பவர்கள் பற்றி விழிப்பாக இருங்கள்

### 51ஆவது படைத்தலைமை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தை முடிபுக்கு கொண்டுவந்து 6 மாத காலத்துக்குள் மக்களுக்கு சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழக் கூடிய சூழலை பாதுகாப்புப் படையினர் ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மக்களின் அன்றாட வாழ்விற்கு தடைகள் ஏற்படுத்தும் விதத்தில் சில நபர்கள் ஊனமுற்ற படை வீரர்களின் பிள்ளைகளது நலன்புரி நடவடிக்கைகளுக்கென்றும் சிங்கள, தமிழ், முஸ்லிம் அநாதைச் சிறுவர்களுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## செல்வந்தக் குடும்பமாகுவதற்காக நான் அரசியலில் ஈடுபடவில்லை

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

ஆசியாவின் செல்வந்த குடும்பமாக உருவாகும் நோக்கில் தாம் அரசியலில் ஈடுபட வில்லை என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியமாநாட் டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். வத்தளை வெலிசர நவலோக மைதானத்தில் இந்த மாநாடு நடைபெற்றது. யுத்த வெற்றியை ஈட்டிக் கொடுத்த ஏனைய படைத்தளபதிகள் முதல் கடைசி நிலை சிப்பாய் வரையிலான அனைவருக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே எனது எண்ணம்.

எனினும் இராணுவத்தளபதியாகவோ அல்லது கூட்டுப்படைத் கட்டளைத் (16ஆம் பக்கம் பார்க்க)

## மதவாச்சியூடாக செல்ல பயண அனுமதிதேவையில்லை சோதனை நடவடிக்கைகள் வழமைபோல் இடம்பெறும்

(கொழும்பு)

பாதுகாப்பு காரணங்களுக்காக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பி.பி.சி தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளதாவது,

மதவாச்சி சோதனைச் சாவடி திறக்கப்பட்டுள்ளது என்பது அங்கு சோதனைகள் இடம் பெற மாட்டாது என்பதல்ல. அரசாங்க வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் இந்த சோதனைச் (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இரா.சம்பந்தன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

பாதுகாப்பு காரணங்களுக்காக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் பி.பி.சி தமிழோசைக்கு நேற்றிரவு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளதாவது,

மதவாச்சி சோதனைச் சாவடி திறக்கப்பட்டுள்ளது என்பது அங்கு சோதனைகள் இடம் பெற மாட்டாது என்பதல்ல. அரசாங்க வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் இந்த சோதனைச் (16ஆம் பக்கம் பார்க்க)

இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய நற்செய்தி!

ASP ENTERPRISES

முதன் முறையாக அறிமுகப்படுத்தும்

INDUCTION COOKER

அனுகூலங்கள்

- # குறைந்த நேரம்
- # சிக்கன மின்சாரம்
- # தீ,மின் அபாயமில்லை
- # இலகுவாகக் கையாளலாம்
- # ஒரு வருட உத்தரவாதம்
- # இதற்குரிய சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்
- # சர்வதேச தரச்சான்றிதழ் பெற்றது (ISO 9001 : 2000)






கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

## கௌரவிப்பு விழா

(மிருசுவில்)

மிருசுவில் றோ.க.த.க பாடசாலையில் கல்வி கற்று க.பொ.த(உ/த) பரீட்சையில் 2009இல் தோற்றி சித்தியடைந்த மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா மற்றும் ஒளி விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் எவ்.ரி.எடிசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், மிருசுவில் பங்குத் தந்தை அருட்பணி ஜோ.த.சோதிநாதன், யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு என்.ஜே.ஞானபொன்ராஜா, யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி கே.பொன்னம்பலம், யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜா, தென்மராட்சி பிரதேசமின் அத்தியட்சகர் ஏ.அன்ரன் ஞானப்பிரகாசம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந)

## தவில் இசை மேதை முத்துக்குட்டி காலமானார்

(யாழ்பாணம்)

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் ஆஸ்தான தவில் வித்துவான் இசைக்கம்பர் முத்துக்குட்டி நேற்று காலமானார்.

30 வருடங்களுக்கு மேல் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆஸ்தான தவில் வித்துவானாக இவர் பணியாற்றிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## டெங்கு நோய் விழிப்புணர்வு யாழ்.மாநகர சபை பிரிவில் முன்னெடுப்பு

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைந்து யாழ்.மாநகர சபை நடத்திய டெங்கு நோய் விழிப்புணர்புக் கருத்தரங்கில் மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றதாக முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். இதில் நேற்று முன்தினம் நாவாந்துறை சென்.மேரிஸ் கல்லூரி நடைபெற்ற கருத்தரங்கில் 150 பேர் வரையிலும் , நேற்று குருநகரில் நடைபெற்ற கருத்தரங்கில் 100இற்கும் மேற்பட்டவர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இக் கருத்தரங்கில் யாழ்.மாநகர சபையின் முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி தெய்வேந்திரனால் அன்பளிப்பு செய்யப்பட்ட டெங்கு விழிப்புணர்பு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-5)

# தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்காவிடில் நாம் விரும்பாத ஒருவர் ஜனாதிபதியாகலாம்

## இரா.துரைரத்தினம் கருத்து

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கத் தவறும் பட்சத்தில் வாக்குகள் மோசடி செய்யப்படலாம் அல்லது விரும்பாத ஒருவர் தெரிவாகுவதற்கு உதவியாக அது அமைந்துவிடலாம் என ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணியின் தலைவரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா.துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

அப்படி வாக்களிப்பதென்றால் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு உடன்பாடுள்ளவரை ஆதரிக்கலாம்.வடக்கு கிழக்கு இணைய வேண்டுமா? அல்லது பிரிய வேண்டுமா? என்பது தொடர்பாக அரசு தீர்மானிக்க முடியாத பட்சத்தில் கிழக்கு மாகாணத்தின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தீர்மானித்தல் வேண்டும். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழ் விடங்களில் தொடரும் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

அத்தோடு அரச காணிகள் தொடர்பான நிலையான கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் காலத்திற்கு ஏற்ற வகையில் திருத்தப்பட்டு கிழக்கு மாகாண சபை பூரணத்துவமான சபையாக இயங்கும் வகையில் அதிகாரங்களை உடனடியாக வழங்க ஆவன செய்யப்பட வேண்டும்.1982ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம் பெயர்ந்த சகல மக்களும் அவர்களது விருப்பத்திற்கு அமைய சொந்த கிராமங்களில் மீளக்குடியேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

வடகிழக்கில் நிர்வாகத்துறையில் இராணுவ மயமாக்கல் மற்றும் பாதுகாப்பு வலயம் போன்ற செயற்பாடுகள் மாற்றப்பட வேண்டும்.

இவை உட்பட்ட பல்வேறு விடயங்களை தமிழ் மக்களின் அபிலாஷைகளாக குறிப்பிட்டுள்ளதோடு, தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து தமிழ்க் கட்சிகள் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத் தியுள்ளார். (ந)

# அரசாங்க சட்டத்தரணிகளின் தாளத்திற்கு ஆட்டம் போட முடியாது–பிரதம நீதியரசர்



(கொழும்பு)

அரசாங்க சட்டத்தரணிகளின் தாளத்திற்கு ஏற்ப ஆட்டம் போடமுடியாது என பிரதம நீதியரசர் அசோக டி சில்வா நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ படுகொலை முயற்சி வழக்குடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கடந்த இரண்டு ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட ரவிகுமார் என்பவரை மீண்டும் கைது செய்ய அனுமதி வழங்குமாறு அரசாங்க சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை நிராகரித்த போதே அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

தம்மை மீண்டும் கைது செய்வது அடிப்படை உரிமை மீறலாகும் என ரவிகுமார் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

ரவிகுமாரை மீண்டும் கைது செய்ய பிடிவிராந்து கோரும் பொலிஸார் யாரின் சொல்லுக்காக இவ்வாறு செயற்படுகின்றார்கள்? என கேள்வி எழுப்பியுள்ள பிரதம நீதிபதி, பொலிஸாரின் தாளத்திற்கு ஏற்ப சட்டமா அதிபர் திணைக்களம் நடனமாடுவதனால் இந்த நிலைமை உருவாகியுள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரைமீறி பொலிஸார் செயற்பட அனுமதிக்கப்படக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.வேறு ஓர் வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்ட ரவிகுமாரை எவ்வாறு கைது செய்ய முடியுமென அவர் தெரிவித்துள்ளார் (ந)

## இரண்டு பௌத்த பிக்குகள் யாழிற்கு பாதயாத்திரை

(கொழும்பு)

இன நல்லிணக்கத்தை வலியுறுத்தி இரண்டு பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்திற்கு பாத யாத்திரை மேற் கொண்டுள்ளனர். எம்பிலிப்பிட்டிய திரானந்த மற்றும் பதுளை விமலஞான ஆசிய பௌத்த தேரர்கள் இவ்வாறு பாத யாத்திரை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் குறித்த இரண்டு பௌத்த தேரர்களும் மேற்கொள்ளும் இந்த பாத யாத்திரை யாழ்ப்பாணத்தில் நிறைவடைய உள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி குறித்த பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தை வந்தடைவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (ந)

## பெற்றோரை இழந்த பிள்ளைகளை இந்துமாமன்றத்திடம் தாருங்கள்

### அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

வன்னியின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து தற்போது நலன்புரிக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பெற்றோரை இழந்ததுடன், விழிப்புலன் மற்றும் செவிப்புலனும் இழந்த சிறுவர்களை தாம் பொறுப்பெடுக்க ஆயத்தமாக உள்ளதாகவும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுப் பணிமனைக்கு விஜயம் செய்த திருமதி கைலாசபிள்ளை தலைமையிலான அகில இலங்கை இந்து மாமன்ற நிர்வாகிகளே மேற்படி வேண்டுகோளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நேரடியாக விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில், முன்னர் புதுக்குடியிருப்பில் இயங்கிய பராமரிப்பு நிலையமொன்றில் வசித்த சிறுவர்கள் உட்பட அண்மைய யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏறக்குறைய இருநூறு வரையிலான சிறுவர்கள் தற்போது நலன்புரி கிராமங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.இச் சிறுவர்களை தம்மிடம் ஒப்படைக்குமிடத்து தாம் அவர்களை மன்னார் அல்லது வவுனியா அல்லது கொழும்பு போன்ற ஏதாவது ஒரு பொருத்தமான இடத்தில் தங்கவைத்து பராமரிக்க முடியும் எனவும் தெரிவித்தனர்.இவ்விடயத்தில் கவனமெடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலதிக நடவடிக்கைகளுக்காக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் திருமதி ஜெகராஜசிங்கத்தின் கவனத்திற்கு உடனடியாக தெரியப்படுத்தியதுடன் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக மேலதிக விபரங்களையும் உரிய கோரிக்கை மனுவையும்கையளிக்குமாறு கேட்டுக் கொண்டார். (ந)


யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Post Graduate Diploma in Management (Pre.MBA) (MBA final (Topup) in UK / London) காலம் 9 மாதங்கள்

To Whom :பட்டதாரிகள், (BA,Bsc) வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் (HNDM, HNDA)

Diploma in English 100 % வெற்றி

100 % பயிற்சி Advanced Diploma in English காலம் 6 மாதங்கள்

மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது

ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

Foundation Diploma In Hospitality Management (Topup degree in UK / London) காலம் 6 மாதங்கள் Hotel Management

இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் (Degree) பட்டப்படிப்பை லண்டனில் (London - UK) கற்கமுடியும்.

கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது, மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

Access Programming (Foundation Degree Programme) காலம் 6 மாதங்கள்

O/L முடித்த மாணவர்கள் அல்லது A/L லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து Higher National Diploma & Degree போன்ற கற்கை நெறிகளைக் கற்று, Bsc, BBA,MBA பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு Foundation Diploma In Nursing (Health & Social Care) Topup degree in UK / London காலம் 6 மாதங்கள்

கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு 100 % Student Visa பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

Foundation Diploma in Management காலம் 6 மாதங்கள் (For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)

இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.

தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் Management துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road) (ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)

Tel :021 2224550 E-mail: info@bchs.lk HotLines: 0773501499 0777222422/ 0714299935



EDUCATION YEAR- 2010

BASIC COMPUTER STUDIES FOR KIDS

05-12-2009 For Grade 6,7,8 & 9 12-12-2009

4.15pm Mr. P.VINOTHAN 5.00pm

Online Classes For Kids Individual Observation

IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845 கந்தர்மடச் சந்தி மேற்கு 1ம் ஒழுங்கை.



EDUCATION YEAR -2010

ICT Gr 10 & 11

05.12.2009 (4pm- 6pm)

Mr. S.Branavan

(B.A(Hons), MACS, Dip. in Comp.Sys.Design(NIBM))

Mon & Fri 4.15 - 6.15

IECE 121/1 Arasady Road, Kanthermadam



SPOKEN ENGLISH for KIDS from Grade 3 upwards

SPOKEN ENGLISH WITH GRAMMER

By: - MR.K.RAMANATHASAN

IECE 121/1, அரசடி வீதி, கந்தர்மடம். TP: 021-222 7845 கந்தர்மடச் சந்தி மேற்கு 1ம் ஒழுங்கை.

# இன்று ஒரு தகவல்

## மனம் ஒரு சுமை

ரயிலொன்று வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. சிறிதுநேரத்தில் அது ஒரு ரயில் நிலையத்தைச் சென்றடைந்தது.

அப்பொழுது அதில் ஒருவர் ஏறினார். மூட்டையொன்றைத் தலையில் சுமந்தவாறே உள்ளே வந்து ஓரிடத்தில் உட்கார்ந்தார்.

ரயில் புறப்பட்டது.

இவர் தன் தலையிலிருந்த மூட்டையைக் கீழே இறக்கி வைக்கவில்லை. சுமந்துகொண்டே வந்தார்.

இதைப் பார்த்த ஒருவர் "ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்? மூட்டையைக் கீழே இறக்கி வைக்கலாமே!" என்றார்.

அதற்கு அவர் "வேணாங்க..... தலையிலிருக்கிற மூட்டையை இறக்கி வைத்தால் ரயிலுக்குப் பாரம் அதிகமாக இருக்கும்" என்றார்.

இப்படி ஒரு ஆளைப் பார்த்தால் நமக்குச் சிரிப்புத்தான் வரும். ஏனென்றால் ரயில் அந்த மூட்டையையும் சுமந்து கொண்டுதான் போகிறது.

அவன் அந்த மூட்டையைத் தலையில் வைத்திருந்தாலும் ஒன்றுதான். தரையில் வைத்திருந்தாலும் ஒன்றுதான்.

அதனால் ரயிலுக்கு எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. அதே மாதிரித்தான்...

நமது மனமும் .... இதுவும் ஒரு தேவையில்லாத சுமை. அநாவசியமாக சுமந்துகொண்டிருக்றோம்.

இதைக் கீழே இறக்கி வைத்துவிட்டால்..... வாழ்க்கைப் பயணம் சுகமாக இருக்கும்.

ரயில் பிரயாணம் செய்யும் அவன் அந்த மூட்டையைச் சுமக்கிறான்.

வாழ்க்கைப் பிரயாணம் செய்யும் நாம் மனதைச் சுமக்கிறோம்.

இது இரண்டுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. மனதைக் கீழே இறக்கி வைத்துவிட்டால் பாரமில்லாமல் வாழலாம்.

பறவைகள் போல் பறக்கலாம்.

குழந்தைகள் போல் கள்ளங் கபடமில்லாமல் வாழலாம்.

இந்த வெளியுலகத்தில் நாம் நிலைபெற்று இருக்க வேண்டும். வேரூன்றி இருக்க வேண்டும்.

அதேசமயம் நம்முடைய உள்வெளியில் ...... ஆன்மீக வாழ்வில் பாரமில்லாமல் இருக்கவேண்டும்.

அப்பொழுது பறக்கவேண்டும். நதியைப் போல ஓட வேண்டும். மிதக்க வேண்டும். பயணம் சுகமாக இருக்கும். களைப்புத் தெரியாது. கவலை தெரியாது.

நம்ம ஆள் ஒருவன் தலையில் ஒரு பெரிய மூங்கில் கூடையுடன் ரயிலில் வந்து உட்கார்ந்தான். கூடை தலையில் இருந்தது. கீழே இறக்கி வைக்கவில்லை.

எதிரில் இருந்தவர் கேட்டார்.

"எதற்காக அதை அநாவசியமாக சுமந்து கொண்டிருக்கிறீங்க... இறக்கி வையுங்களேன்" என்றார்.

"இல்லைங்க... நான் வீட்டைவிட்டுப் புறப்படும்போதே என் பையன் சொல்லிவிட்டான்... கூடையை தலையை விட்டு இறக்கக் கூடாது என்று" என்றார்.

அவன் சின்னப் பையன் விபரமில்லாமல் சொல்லியிருப்பான். இப்ப என்ன நேரில் வந்தா பார்த்துக் கொண்டிருக்கிறான். நீங்கள் இறக்கி வையுங்கள், என்றார் அவர்.

"அவன் நேரில் பார்க்கவில்லை. இருந்தாலும் நான் இந்தக் கூடையைக் கீழே இறக்கி வைத்தால் அது அவனுக்குத் தெரிந்துவிடும்." என்றார் இவர்.


"அது எப்படி?"

"அவன் தனக்கு டிக்கெற் வாங்க வேண்டாமென்று சொல்லி... இப்ப இந்தக் கூடைக்குள் தான் உட்கார்ந்திருக்கிறான்" என்றார் இவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையால் நாட்டின் சகல மக்களுக்கும் ஆபத்து

## இரா.சம்பந்தன்



(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இந்த நாட்டின் சகல மக்களுக்கும் தீங்கிழைக்கக் கூடியதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார் ஜனாதிபதி முறைமையை இல்லா தொழிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதானமாகக் கொண்டு ஜே.வி.பி. இரண்டு தடவைகள் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவு அளித்த போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை என்பதால் மீண்டுமொரு தடவை அதே நிபந்தனையுடன் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஜே.வி.பி. ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாதாரண சட்ட திட்டங்களின் அடிப்படையில் பொதுமக்கள் அனுபவிக்கக்கூடிய சில உரிமைகளைக் கூட சிறுபான்மை மக்கள் சரியான முறையில் அனுபவிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதெனவும் தனிப்பட்ட ஒரு நபரின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற வகையில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் குறித்த தீர்மானங்களை எடுக்க முடியாது எனவும்அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## பரிசளிப்பு விழா

(இருபாலை)

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு அதிபர் க.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கல்வியமைச்சின் நிபுணத்துவ ஆலோசகர் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி. குணசேகரம், ஆசிரிய வளநிலைய முகாமையாளர் ஞா.இரத்தினசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும், பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-9-136)

## க.பொ.த.(சா/த) பரீட்சை -2009

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் வழங்கல்

வன்னி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பிராந்திய சேகரிப்பு நிலையம், யாழ்ப்பாணம் -II இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம், கோப்பாய் கல்விக் கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பாடசாலைகளினூடாக க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதற்கமைய பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் அனுமதி அட்டைகளை சரிபார்த்து பெற்று அன்றைய தினமே தத்தமது பாடசாலைகளில் உரிய மாணவர்களுக்கு வழங்குமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (6)

## இன நல்லிணக்கத்தை வலியுறுத்தி

# இரண்டு பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்திற்கு பாதயாத்திரை

இன நல்லிணக்கத்தை வலியுறுத்தி இரண்டு பௌத்தபிக்குகள் யாழ்ப்பாணத்திற்கு பாதயாத்திரை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.எம்பிலிட்பியே தீரானந்த மற்றும் பதுளை விமலஞான ஆகிய பௌத்த தேரர்கள் இவ்வாறு பாதயாத்திரை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் குறித்த இரண்டு பௌத்த தேரர்களும் மேற்கொள்ளும் இந்த பாதயாத்திரை யாழ்ப்பாணத்தில் நிறைவடையவுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி குறித்த பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்தை வந்தடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6-9)

## இராசி பலன்

*07-12-2009*
*(கார்த்திகை 21 திங்கட்கிழமை)*
*சஷ்டி பின்னிரவு 1.30 மணிவரை*
*ஆயிலியம் முன்னிரவு 7.23 மணிவரை*
*இராகுகாலம் 7.47-9.17 மணிவரை*
*சுபநேரம் 12.17 - 1.47 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | பயந்த சுபாவம், புதிய தகவல், அற்பர் உறவு, முயற்சி தாமதம். |
| இடபம் | அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, காரிய அனுகூலம், பண வருவாய். |
| மிதுனம் | குடும்பக்கவலை, தனவிரயம், செய்தொழில் விருத்தி, முயற்சி தாமதம். |
| கடகம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், போசனசுகம், நல்ல முயற்சி. |
| சிங்கம் | கோபப்படுதல், காரிய அலைச்சல், சுபசெலவு, உறவினர் சந்திப்பு. |
| கன்னி | குடும்ப மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, பெரியோர் உதவி, கீர்த்தி. |
| துலாம் | சுபநிகழ்வு, உற்சாகம், தொழில் முன்னேற்றம், நண்பர்கள் உதவி. |
| விருச்சிகம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம், பயணம். |
| தனுசு | ஆரோக்கியக் குறைவு, போசன சுகம், முயற்சி தாமதம், எதிர்பாராத பகை. |
| மகரம் | திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, காரிய நன்மை, போசன சுகம். |
| கும்பம் | சுகவாழ்வு, சத்துருஜெயம், முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| மீனம் | காரிய இடையூறு, கௌரவக் குறைவு, பித்தரோகம், பூர்வ புண்ணிய கருமம். |


வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 160 |
| தக்காளி | 70 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 100 |
| கரட் | 60 | 70 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 150 | 60 | 140 |
| பாகற்காய் | 80 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 30 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 70 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 200 |
| போஞ்சி | 80 | 100 | 160 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | - |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |

# இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க அரசு எப்போதும் துணையாக இருக்கும்

## புழல் அகதிகள் முகாமில் மு.க.ஸ்டாலின்



(சென்னை)

சென்னையை அடுத்த புழல் இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் 440 குடும்பங்களுக்கு இலவச கலர் டி.விக்கள் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் ஒருவருக்கு ரூ.20 ஆயிரம் நிதி உதவி ரூ.25ஆயிரம் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நிதியுதவிகளை தமிழகதுணை முதல்வர் மு.க ஸ்டாலின் வழங்கினார். அதன்பின் அங்கு உரையாற்றிய அவர் தெரிவித் ததாவது, புழல் அகதி கள் முகாமில் முதல்வரின் உத்தர வின் பேரில் சாலை மற்றும் விளையாட்டுத் திடல் மேம் படுத்தப் பட உள்ளன. புதிய மின்கம்பம் அமைக்கப்பட்டுள்ளது. குளியலறை, கழிவறைகள் சீரமைக்கப்பட்டுள்ளது. முகாமில் உள்ளவர்களும் மருத்துவ சிகிச்சை பெற வசதியாக கலைஞர் காப்பீட்டுத் திட்டத்துக்காக புகைப்படம் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் ரூ2.50 இலட்சம் செலவில் புதிய பல்பொருள் வர்த்தக நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப் படும். சுமார் ரூ8 கோடி செலவில் புதிய குடியிருப்புகள் கட்ட முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட உள்ளன. தமிழகத்தில் வாழும் இலங்கை தமிழர்களின் துயரங்களைக் களைய அரசு ரூ.100 கோடி நிதியினை முதல்வர் ஒதுக்கியுள்ளார். தமிழக மக்க ளுக்கு வழங்குவது போல இலங்கைத் தமிழர்க ளுக்கும் இலவச கலர் டி.வி, உயர் சிகிச் சைக்காக கலைஞர் காப்பீட்டுத் திட்டம், திருமண நிதி உதவித் திட்டம், பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டை, புதிய கொங்கிறீற் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களுக்கு விதிகளை தளர்த்தி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க முதல்வர் உத்தர விட்டுள்ளார்.

இலங்கை அகதிகளின் நல் வாழ்வுக்காக அரசு தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இலங்கைத் தமிழர்களுக்கு தி.மு.க அரசு எப்போதும் துணை நிற்கும் என்றார் மு.க. ஸ்டாலின். (6)

## ஜில் என்ற காற்றைப் பெற புதிய தொப்பி அறிமுகம்

வெயில் காலத்தில் ஏற்படும் வெப்பத்தை குறைத்து ஜில் காற்றை அளிக்கும் சோலர் தொப்பி விற்பனைக்கு வரவுள்ளது. பெங்களூரைச் சேர்ந்த ஒரு நிறுவனம் சோலர் தொப்பியை வடிமைத்துள்ளது.

தொப்பியின் மேல் பகுதியில் சிறிய அளவில் மோட்டார் பனலும் முகப்பு பகுதியில் மிகச்சிறிய விசிறியும் பொருத்தப்பட்டுள்ளன.

சிறிய நேரம் தொப்பியுடன் வெயிலில் நின்றால் விசிறி சுற்றுகிறது. இதனால் முகத்திற்கு ஜில்லென காற்று வீசுகிறது. மரபுசாரா எரிசக்தி உபயோகிப்பை ஊக்குவிக்கும் இலட்சியத்துடன் பெங்களூரில் நடந்த சோலர் கண்காட்சியில் இத் தொப்பிகளை இளம் பெண்கள் அணிந்து கொண்டனர். (6)

## இலங்கை அகதிகளுக்கு இலவச தொலைக்காட்சி

(திருச்சி)

கொட்டப்பட்டி இலங்கை தமிழ் அகதிகள் முகாமில் உள்ள 230 குடும்பங்களுக்குத் தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் கே.என். நேரு இலவச கலர் டி.வி.க்களை வழங்கினார்.

திருச்சி கொட்டப்பட்டியில் உள்ள இலங்கை தமிழ் அகதிகள் முகாமில் உள்ள குடும்பங்களுக்கு இலவச கலர் டி.வி.க்கள் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு மாவட்ட ஆட்சியாளர் சவுண்டையா தலைமை தாங்கினார்.

விழாவில் தமிழகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் கே.என். நேரு கலந்து கொண்டு 230 இலங்கைத் தமிழ் அகதிக் குடும்பங்களுக்கு இலவச கலர் டி.வி.க்கள் மற்றும் ஊனமுற்றோர் 2 பேருக்கு 2 சக்கர நாற்காலியும், 3 பேருக்கு ஊன்று கோல்களையும் ஒரு காதொலிக் கருவியையும் வழங்கினார். (6)

## தனி மாநிலம் கோரி தொடர்ந்து 7வது நாளாக உண்ணாவிரதம்

### சந்திரசேகரராவ் உடல்நிலை பாதிப்பு



(சித்தூர்)

தெலுங்கானா மாநிலம் கோரி மருத்துவமனையில் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வரும் சந்திர சேகர ராவின் உடல்நிலை நேற்று முன்தினம் சனிக்கிழமை மேலும் மோசமடைந்தது.

இதையடுத்து, அவசர சிகிச்சை பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தெலுங்கானா பகுதியில் இன்று முதல் 48 மணிநேரத்துக்கு கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவில் உள்ள 11 மாவட்டங்களை பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கும்படி வலியுறுத்தி, தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் சந்திரசேகர ராவ் நேற்று முன் தினம் சனிக்கிழமை 7 ஆவது நாளாக ஐதராபாத்தில் உள்ள நிம்ஸ் அரச மருத்துவமனையில் உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய உடல் நிலை கடுமையாக மோசமடைந்துள்ளது.

இதனால், தீவிர சிகிச்சை பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். (6)

## இலங்கைக் கடலில் கடல் அட்டைகளுடன் — இந்திய மீனவர்கள் மூவர் கைது —

(இராமேஸ்வரம்)

இலங்கைக்குப் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கடல் அட்டைகளைக் கடத்திய தமிழக மீனவர்கள் மூவரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். தலைமன்னார் கடல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ரோந்து சென்ற இலங்கைக் கடற்படையினர் தமிழகக் கடல் பகுதியில் இருந்து நாட்டுப்படகு ஊடுருவியதை கண்டு துரத்திப் பிடித்தனர். அப்படகில் 40 சாக்கு மூடையில் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகள் இருந்தன.

இதனைத் தொடர்ந்து படகில் இருந்த மீனவர்களைக் கைதுசெய்த அவர்கள் பல இலட்சம் மதிப்புள்ள கடல் அட்டைகளைப் பறிமுதல் செய்து இலங்கை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்கள் மூவரும் மன்னார் கடற்படை முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். (6)










யூரோவில் இன்ஜினியர்ஸ் அன்ட் கொன்ஸ்ரக்ரேஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் ஐ.எஸ்.ஓ.9001:2008 சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றமைக்கான பாராட்டுவிழா நேற்று யூரோவில் நிறுவனத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதையும், யூரோவில் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் எம்.இராமதாசன் உரை நிகழ்த்துவதையும், ஐ.எஸ்.ஓ. நிறுவன தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் செயற்பாட்டு முகாமையாளர் கே.விவேகானந்தன் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திடம் தரச்சான்றிதழைக் கையளிப்பதையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து நினைவுப்பரிசில் பெறுவதையும் படங்களில் காணலாம்.

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

71

### புராணங்கள் முதலியன

வடமொழியில் உள்ள புராணங்களைத் தமிழில் எழுதும் முயற்சி வளர்ந்தது. அவ்வாறு தரப்பட்ட புராணங்களுள் பெரியது பத்தாயிரம் செய்யுள் உடைய கந்தபுராணம். அது வடமொழியில் உள்ள சிவசங்கர சங்கிதையைத் தழுவிப் பதினாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுள்களால் தமிழில் எழுதியது ஆகும். முருகனின் பிறப்பு, வளர்ப்பு, திருவிளையாடல், சூரபத்மனுடன் நிகழ்த்திய போர், தெய்வயானையின் திருமணம், வள்ளியின் காதல் முதலியவை பற்றி விரிவாகப் பாடியபுராாணம் அது. கச்சியப்ப சிவாச்சாரியார் என்னும் அதன் ஆசிரியர் பழைய தமிழ் இலக்கிய மரபுகளை விடாமல் போற்றியவர். வர்ணனைகளுக்குக் கற்பனை மெருகு ஏற்றிப் பாடுவதில் வல்லவர் அவர். கல்விச் சுவை நிரம்பிய புராணம் ஆகையால் மற்றப் புராணங்களை விட அது சிறந்து நிற்கிறது.

செவ்வைச் சூடுவார் என்னும் புலவர் வடமொழி பாகவதத்தைத் தழுவித் தமிழில் 5000 செய்யுள் கொண்ட நூல் இயற்றினார். அரசகேசரி என்பவர் காளிதாசனின் இரகுவம்சத்தை மொழிபெயர்த்து 2480 செய்யுளில் பாடினார். புகழேந்திப் புலவர் பாரதத்தில் வரும் நளனுடைய கதையை அழகான வெண்பாக்களால் பாடினார்.

அதிவீரராமர் என்னும் பாண்டிய அரச குடும்பத்தைச் சார்ந்தவர் அதே கதையை விருத்தப்பாவால் பாடினார். கூர்ம புராணத்தையும் இலிங்கபுராணத்தையும் அவர் தமிழிழல் ஆக்கினார். கச்சியப்ப முனிவர் என்பவர் விநாயக புராணத்தை மொழி பெயர்த்துப் பாடினார். வீரகவிராயர் அரிச்சந்திர புராணம் பாடினார். அவருடைய பாடல்களின் நடை நல்ல ஓட்டம் உடையது. பாடல்கள் உருக்கம் உடையவை. கற்பவர் நெஞ்சினை நெகிழ்விக்க வல்லவை. வடமலையப்பர் மச்ச புராணத்தை மொழிபெயர்த்தார்.

சைனர்களுள் மண்டலபுருடர் என்பவர் வடமொழி சைன புராணமாகிய ஆதி புராணத்தை தமிழில் இயற்றி ஸ்ரீபுராணம் எனப் பெயரிட்டார். அது மணிப்பிரவாள நடையில் இயற்றப்பட்டது. கயசிந்தமாணி என்ற சைன நூலும் மணிப்பிரவாளத்தில் எழுதப்பட்டதே ஆகும். மேருமந்தர புராணம் என்னும் சைன நூல் வாமன முனிவர் என்பவரால் இயற்றப்பட்டது. அது இயல்பான தமிழ் நடையில் அமைந்தது. அறநெறிச் சாரம் என்ற நீதி நூல் முன்றுறையரையனார் என்ற சைனரால் இயற்றப்பட்டது.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

### தல புராணங்கள்

உமாபதிசிவம் என்பவர் பதினான்காம் நூற்றாண்டில் கோயில் புராணம் என்னும் தலபுராணம் பாடினார். அதற்குப் பிறகு அதை ஒட்டி எழுந்த நூல்கள் பல. தல புராணங்களுள் புகழ்பெற்றவை மதுரையில் உள்ள சிவபெருமானின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கூறும் புராணங்களே. வேம்பத்தூரார், பெரும்பற்றப்புலியூர் நம்பி, பரஞ்சோதி என்னும் புலவர்கள் திருவிளையாடற்புராணங்கள் இயற்றினார்கள். பரஞ்சோதி இயற்றிய திருவிளையாடலே இன்று பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. அவருடைய விருத்தப்பாக்கள் இனிமையையும் தெளிவும் உடையனவாக இருத்தலே அதற்குக் காரணம் ஆகும். 3360 பாடல்கள் கொண்ட விரிவான நூல் அது. விளக்கமான வர்ணனைகள் பல அந்த நூலில் உண்டு.

தருமபுர மடத் தைச் சர்ந்த புலவர் கள் திருமழபாடி, திருவொற்றியூர் முதலான தலங்களுக்குப் புராணங்கள் பாடி னார்கள். நிரம்ப அழகிய தேசிகர் திருப்பரங்கிரிப் புராணம், சேது புராணம் என்னும் தல புராணங்களை இயற்றினார். வட நாட்டுத் தலமாகிய காசிக்கும் நூல் இயற்றியவர் அதிவீரராம பாண்டியர். காசிக் காண்டம் என்பது அந்த நூலின் பெயர். திருமலைநாதர் சிதம்பர புராணம் பாடினார். திருத்தணி என்னும் முருகன் தலத்தைப் புகழ்ந்து தலபுராணம் இயற்றினார் கச்சி யப்ப முனிவர். தணிகைப் புராணம் என்னும் அந்த நூல் தல புராணங்களுள் அழியாமல் வாழும் சிறப்புடையது ஆகும்.

திருவாரூர், திருவெண்காடு, திரு வண்ணாமலை, திருச்செங்கோடு, விரிஞ்சீபுரம், வேதாரணியம், கும்பகோணம் முதலான ஊர்கள் பற்றித் தலபுராணங்கள் பாடப்பட்டன. புகழ்பெற்ற புலவர் சிவப்பிரகாசர் திருக்கூவப் புராணம் பாடினார். அவரும் அவருடைய உடன்பிறந்தோர் இருவரும் சேர்ந்து பாடிய சீகாளத்திப் புராணம் சுவையான நூல். வீரராகவ முதலியார் திருக்கழுக் குன்றப் புராணம் இயற்றினார்.

தலபுராணங்கள் அக்காலத்தில் மக்களின் உள்ளங்களை மிகக் கவர்ந்தி ருந்தன. நாட்டுப்படலம், நகரப்பபடலம் என முதலில் அமையும் பகுதிகள் இலக்கியச் சுவையுடன் அமைக்கப்பட்டன. புலவர்கள் இயற்கையழகு பற்றியும் நிலவளம் முதலியன பற்றியும் உழவர் முதலானவர்களின் வாழ்க்கை வளம் பற்றியும் கண்ட கனவுகளை எல் லாம் அந்தத் தலபுராணங்களுள் அமைந்தது, அந்தந்த நாடுகளையும் ஊர்களையும்; சிறப்பித்தார்கள்.

ஆகவே, அந்தந்த நாட்டு மக்கள் படித்துத் தம்தம் நாடுகளையும் ஊர்களையும் பற்றிப் பெருமையும் பற்றும் கொண்டு மகிழ்ந்தார்கள். கொடியவர்களும் அதிகாரச் செருக்கு மிகுந்தவர்களும் துன்பமுற்று மனம் திருத்திக் கோயில்களுக்கு வந்து வழிபட்டு நல்லவர்களாக மாறியதாகத் தலபுராணங்கள் கதைகள் கூறுவது வழக்கம்.

அந்தக் கதைகளைச் சுவையோடு படித்து மக்கள் மகிழ்ச்சியுறுவதற்குத் தலபுராணங்கள் பயன்படுத்தப்பட்டன. கதைகளோடு கலந்து கலையின்பத்தை ஊட்டுவதற்கு அந்த நூல்கள் உதவின.

**பேராசிரியர் மு.வரதராசன்**

பதினேழாம் நூற்றாண்டில் தலபுராணங்கள் பல இயற்றிப் புகழ்பெற்றவர் எல்லப்ப நாவலர். திருவண்ணாமலை, திருவெண்காடு, திருவிரிஞ்சை, தீர்த்தகிரி, திருச்செங்காட்டங்குடி முதலிய தலங்களுக்குப் புராணங்கள் எழுதினார்.

விரிவான வருணனை களைச் சுவையாக அமைப்பதில் வல்லவர் அவர், பக்திச்சுவை நிரம்பிய பாடல்களை அவற்றில் அமைத்துள்ளார். திருவண்ணா மலை பற்றி அவர் இயற்றிய திருவருணைக் கலம்பகம், கலம்பக நூல்களுள் சிறப்புடைய தாகப் போற்றப்படுகிறது. இலக்கிய நயம் உள்ள பாடல்கள் பல அதில் உள்ளன.

(தொடரும்)

# தமிழ் மக்களிற்கான உதவிகள் தொடர்பில் பிளேக் இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை

தடுப்பு முகாம்களில் இருந்து அழைத்து செல்லப்பட்டு வீதியோரங்களில் அநாதைகளாக விடப்பட்டுள்ள தமிழ் மக்களிற்கான உதவிகளை வழங்க வேண்டும் என்பதில் அமெரிக்க வெளியுறவு துணை செயலாளர் றொபேட் ஓபிளேக் இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் அமெரிக்காவுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் லாறி கொகஸ் றொபேட் ஓ பிளேக்கிற்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தடுப்பு முகாம்களில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ள தமிழ் மக்கள் வீதியோரங்களில் அநாதைகளாக விடப்பட்டுள்ளனர். அவர்களை இலங்கை அரசு முற்றாகக் கைவிட்டுள்ளது.

இந்த மக்களிற்கான உதவிகள் தொடர்பில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்காவின் துணை வெளியுறவுச் செயலாளர் றொபேட் ஓ பிளேக் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 ஆயிரம் பேர் தொடர்பான தகவல்களை இலங்கை அரசு தெரிவிக்க வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# ஐ.தே.க. மாநாட்டில் கலந்துகொண்ட அரச ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட அரசாங்க ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்திற்கு சொந்தமான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆகிய தொலைக்காட்சி அலைவரிசைகளைச் சேர்ந்த ஏழு ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. வத்தளையில் நவலோக்க மைதானத்தில் நடைபெற்ற தேசிய மாநாட்டு நிகழ்வுகள் குறித்த செய்திகளை சேகரித்த அரச ஊடகவியலாளர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மாநாடு நடைபெற்ற பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (ச-5)

# விடுவிக்கப்பட்ட 72 ஆசிரியர்களுக்கு கிழக்கு பாடசாலைகளில் தற்காலிக நியமனம்

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்

(கொழும்பு)

வவுனியா நிவாரணக் கிராமங்களிலிருந்து கடந்த மாதம் கிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட 72 ஆசிரியர்கள் தற்காலிகமாக கிழக்கு பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ளனர் என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மேற்படி 72 பேரின் பெயர்ப் பட்டியலை தமக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும கூறினார். இவர்களில் 90 வீதமானோர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களுக்கான பாடசாலைகளை அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களே தீர்மானித்ததாகவும் இவர்களுக்கான மாதச் சம்பளத்தினை வடமாகண கல்வித் திணைக்களமே வழங்கவுள்ளதாகவும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (6)




சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 4 விதி எண் : 5

### உடலமைப்பு

பிறந்த எண் 4, விதி எண் 5 ஆகக் கொண்டவர்கள் ராகு, புதன் ஆதிக்கத்திற்குட்ட வர்கள் .இவர்கள் கம்பீரமான தோற்றமுள்ளவர்களாக இருப்பர்.இவர்களின் உடல் பருமன் சம அளவில் இருக்கும் வசதி பெருகியிருந்தால் பருமன் அதிகமாக இருக்கும் இவர்கள் எப்போதும் மிடுக்கான உடையுடன் காணப்படுவர்.

### மன குணவியல்பு

இவர்களின் தோற்றம் பிறரைக் கவரும் வண்ணம் இருக்கும் ஆனால் இவர்களை யாராலும் புரிந்துகொள்ள முடியாது. இவர்களுக்கு எதுவும் தெரியவில்லைஎன்றாலும் எல்லாம் தெரிந்தவர் போல வெளிக்குக் காட்டிக்கொள்வர். பிறர் மனத்தில் உள்ளதை கிரகிக்கும் ஆற்றலும் பெற்றவர்கள்.

இவர்கள் பிடிவாதக்காரர்கள் .தாம் நினைத்தை எப்படியும் சாதித்துக்கொள்ளத் துடிப்பர். இல்லையெனில் ஆத்திரத்திற்குள்ளாவர். இதனால் பிறரின் விரோதத்துக்குள்ளாக நேரும்.

இவர்களிடம் கொஞ்சமும் நிதானம் இருக்காது.எதிலும் அவசரம் அவசரமாகச் செய்து காரியத்தை முடிக்கத் துடிப்பர். அதனால் பல சங்கடங்களுக்கு ஆளாக நேரும். தன்னைப் போல பிறரும் சுறுசுறுப்பாக அவசரமாக செயல்புரிய வேண்டுமென்று வற்புறுத்துவர். இல்லையென்றால் கோப்பபடுவர்.

இவர்கள் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருப்பர். ஆதாயமின்றி எச்செயலிலும் ஈடுபட மாட்டார்கள். தனக்கு லாபம் இல்லாது பிறருக்கு உதவமாட்டார்கள்.

தன்னுடைய சுய லாபத்திற்காக சில நேரங்களில் சட்டத்திற்கும் நேர்மைக்கும் புறம்பான செயல்களிலும் ஈடுபட நேரும்.

இவர்களைத் தனியாகப் பார்ப்பது அரிது நண்பர்கள் பலர் சூழ்ந்து காணப்படுவர். ஆனால் அதிலும் அவர்களுக்கு சுயலாபம் இருந்தே தீரும். அந்த அளவுக்குத் காரியவாதியாக இருப்பர். ஆபத்து நேரத்தில் நண்பர்களுக்குக் கைகொடுக்கவும் தயங்கமாட்டார்கள்.

இவர்களுக்குத் தெரியாத கெட்ட பழக்கங்கள் இல்லையென்று கூறலாம்.ஆனால் ஒன்றையும் நீண்ட நாள் தொடரமாட்டார்கள்.

### குடும்பவாழ்க்கை

இவர்களின் குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக அமைவது கடினம். இவர்களின் பிடிவாதத்தால் குடும்பத்தில் அடிக்கடி சிறு பூசல்கள் எழுந்த வண்ணம் இருக்கும். பணமிருந்தால் குடும்பத்தில் சந்தோஷமாக இருப்பர். இல்லையென்றால் போராட்டமாக்கி விடுவர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் இரும்பு எந்திர வண்டி வாகனத் துறைகளில் சிறந்திருப்பர். போக்குவரத்துத் துறையை நடத்துபவர்களாகவோ அதில் பணி புரிபவர்களாகவோ இருப்பர் .அல்லது இது போன்ற பொருள்களுக்கு கமிஷன் ஏஜெண்டுகளாகவோ இருக்கக்கூடும்.

இவர்களின் பொருளாதாரத் துறை ஏற்றத் தாழ்வு உள்ளதாக இருக்கும் .பிற்காலத்தில் சுபிட்ச நிலை பெறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ண சம்பந்த காய்ச்சல், மூலம், ரத்தக் கொதிப்பு போன்றவற்றோடு வாத பித்த தொடர்பான நோய்களும் ஏற்படும். மூட்டுவலி காமாலை போன்றன ஏற்படக்கூடும் . நீரிழிவு நோய் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

### சாதக பாதக எண்களும் திகதிகளும்

இவர்கள் சூரியன் , சுக்கிரன், புதன் ஆகிய மூவரின் ஆதிக்கத்திற்குட்பட்ட 1, 6, 5 எண்கள் தொடர்புடையவற்றில் அதிர்ஷ்ட பலன்தரும் எண்ணுக்கு தம் பெயரை மாற்றிக்கொள்ள, யோகமாக இருக்கும். தம் நிறுவனங்களுக்கூட இதே எண்களில் பெயர் வைக்கலாம்.

இவர்களுக்கு 1, 6, 5 அது தொடர்புடைய எண்களும், திகதிகளும் யோகமானவை.

ஆனால் சனியின் ஆதிக்கம் பெற்ற 8 அது தொடர்பு உடைய எண்களும் ,திகதிகளும் யோகமற்றவை.

## உடல் எண் : 4 விதி எண் : 6

### உடலமைப்பு

பிறந்த எண்4, விதி எண் 6 ஆகப் பிறந்தவர்கள் ராகு, சுக்கிரனின் ஆதிக்கத் திற்குட்டவர்கள் இவர்கள் நடுத்தர உயரம், பருமனுடன் கவர்ச்சியுடன் காட்சியளிப்பர். இவர்களின் பார்வை பிறரைக் கவரும் வண்ணமிருக்கும் இவர்கள் எப்போதும் தூய்மையான உடையுடன் காட்சி தருவர்.

### மன ,குணவியல்பு

இவர்கள் மன உறுதியுள்ளவர் எதையும் துணிந்து செய்யும் ஆற்றல் பெற்றவர்கள் . இந்த உலகிலுள்ள இன்ப சுகங்களையெல்லாம் அனுபவித்துவிட வேண்டுமென்று தணியாத ஆசையுடன் துடித்துக்கொண்டிருப்பர்.

இவர்களின் பேச்சாற்றல் பிறரைக் கவரும் வண்ணம் இருக்கும் இவர்கள் அழகிய பொருள் இயற்கைக் காட்சிகள் போன்றவற்றை ரசிக்கவல்லவர்களாக இருப்பர். அதனால் அழகான பொருள்கள் எதைக் கண்டாலும் அதை விலை கொடுத்து வாங்கிச் சேகரிக்கும் இயல்பு இவர்களிடம் காணலாம்.

கலா ரசிகர்களாகவும் இருப்பர். தம் வீட்டையும் சுற்றுப்பறுத்தையும்கூட அழகுபட வைத்துக்கொள்வர். ஆடம்பரப்பிரியர்களாக இருப்பர். எல்லாவற்றிலும் தம்மை பிறர் மதிக்க வேண்டுமென்பதற்காகவே செலவு செய்வர். கடவுள் வழிபாட்டில்கூட அதிக ஆடம்பரத்தைக் காட்டக்கூடியவர்கள்.

இவர்கள் எதையும் முழுமையாகச் செய்ய மாட்டார்கள். ஒரு வேலையைப் பாதியில் விட்டு விட்டு வேறு வேலையில் ஈடுபடுவர். அதனால் சில சங்கடங்களை மேற்கொள்ள வேண்டி வரும்.

பிறரிடம் அன்பாகவும் அனு சரணையாகவும் நடந்து கொள்வர். மற்றவரின் முன்னேற்றத்திற்குத் தம்மால் இயன்றதைச் செய்வர். இவர்கள் ருசியான உணவையே சாப்பிடுவர். சாப்பிடும்போதுகூட எதையாவதொன்றை பேசிக்கொண்டே இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு நல்ல வாழ்க்கைத்துணை அமையும் குடும்பத்தில் சந்தோஷம் அமைதி நிலவும் இவர்கள் தம் வீட்டையும் அதிலுள்ள பொருட்களையும் அழகு பட வைத்துக் கொள்வதில் அதிக கவனமுடன் செலவும் செய்வர். இவர்கள் சந்தோஷத்துடன் வாழ்ந்தாலும் இன்னும் அனுபவிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது. என்று குறைபட்டுக்கொண்டே இருப்பர். இவர்கள் காம இச்சை மிகுந்தவர்களாய் இருப்பர்.

### தொழிலும் வருமானமும்

பொதுவில் இவர்களுக்கு பிறரைக் கவரும் ஆடம்பரப் பொருள்கள் தொடர்பில் தொழில் அமையலாம். கலைத்துறையில் ஈடுபாடு இசை நாட்டியத்துறையில் வருமானம் பெற வாய்ப்புள்ளது. இரும்பு , வண்டி, வாகனங்கள், விற்பனை ஏஜென்சி போன்ற தொழில்களில் வருமானம் உண்டாகும்.

இவர்களுக்கு ஆரம்ப வாழ்க்கையில் கஷ்ட ,நஷ்டங்கள் இருந்தாலும் பிற்காலத்தில் இலாபமும், வருமான பெருக்கமும் உண்டாகும். வீடு, சொத்து, வண்டி வாகன யோகத்துடன் வாழக்கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி மற்றும் உஷ்ண சம்பந்த நோய்கள் ரத்தக் கொதிப்பு, மூலம் போன்றன ஏற்படும். சர்க்கரை அல்லது உப்பு மிகுதிப்பாட்டால் அது தொடர்பான சிறுநீர் கோளாறுகளும் உண்டாக வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும் ,திகதியும்

இவர்களுக்கு சூரியன் , சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 1, 6 அது தொடர்புடையனவற்றில் யோகப் பலன் தரும் விஸ்தார எண்ணுக்கு தம் பெயரை மாற்றிக் கெர்ள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கூட இவை தொடர்புடைய எண்களே யோகம் தருபவை.

இவர்களுக்கு 1, 6 அதிர்ஷ்ட எண்கள் , திகதிகளும் இவை தொடர்புடையவையே.

ஆனால் சனி, குரு ஆதிக்கம் பெற்ற 8, 3தொடர்புடைய எண்களும் , திகதிகளும் சோதனையானவை, யோகமில்லாதவை. (தொடரும்)

# இடம் பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு விடுதிகள்

## இந்து மாமன்றம் ஏற்பாடு

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில் விடுதிகள் அமைத்து அங்கு தங்கியிருந்து படிப்பதற்கான ஏற்பாடுகளை அகில இலங்கை இந்து மாமன்றம் செய்து வருகிறது.

இது தொடர்பாக மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தகவல் தருகையில், தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் (5 முதல் 15 வயதுக்குட்பட் பெண்கள்) , சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி (12 முதல் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள்) , யாழ். இந்துக்கல்லூரி (12 முதல் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள்), மன்னாரில் இந்து மாமன்றத்தினதும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்கள் ஒன்றியத்தினதும் ஆதரவுடன் இயங்கும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் சிறுவர் இல்லம் (5 முதல் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள்), மன்னார் அன்னை இல்லம் (5 முதல் 15 வயதுக் குட்பட்ட ஆண்களும், பெண்களும்) ஆகிய இடங்களில் அமைக்கப்படவிருக்கும் விடுதிகளில் இணைந்து படிப்பதற்கான வசதிகள் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்துள்ள குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு போதிய வசதிகள் இல்லை என்ற காரணத்தாலும் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு ஆதரவு அவசியம் என்பதாலும் மேற்படி இடங்களில் மாணவர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படுகின்றன.

பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவிருப்பதுடன் பெற்றோரின் வறுமை நிலையைக் கவனத்தில் கொண்டும் மேற்படி விடுதிகளில் பிள்ளைகள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை நல்லூர் கோவில் வீதியிலுள்ள இந்து மாமன்ற பிராந்திய அலுவலகம், வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலயம் , மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம், அகில இலங்கை இந்து மாமன்ற தலைமையகம், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தொலைநகல் ஊடாகப் பெறுவதானால் மாமன்றத் தலைமையகத்துடன் (தொலைபேசி இல.011-2434990) தொடர்பு கொள்ளும் படியும் கேட்டுள்ளார். (6)

# நாட்டிற்கு பொன்சேகாவின் சேவை மிக முக்கியமானது

## தேசிய பிக்குகள் முன்னணி ஆதரவுக்குரல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத்பொன் சேகாவை ஆதரிப்பது என தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் அத்தனலே சமிததேரர் தெரிவித்துள்ளதாவது,

கடந்த தேர்தலில் நாம் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்தோம். ஆனால் அவர் அதனை நிறைவேற்றவில்லை.

மக்களிற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஜனாதிபதிக்கு நாம் ஆதரவுகளை வழங்க முடியாது ஜெனரல் சரத் பொன்சேகா மக்களுக்கு அளித்த வாக்குறுதியை போரை நிறைவுசெய்து நிறைவேற்றியுள்ளார். எனவே அவர் தான் ஜனாதிபதி பதவிக்கு ஏற்றவர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகள் குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம். அதனை பொன்சேகா பதவிக்கு வந்த பின்னர் சீர் செய்ய வேண்டும். குறிப்பாக இலங்கை காவல் துறை மிகவும் மோசமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அவர்கள் தாங்கள் நினைத்ததை மேற்கொண்டு வருகின்றனர்.

இது சரியானது அல்ல சமூகத்தை நாம் மேம்படுத்த வேண்டும் .அரச தலைவருக்கான வேட்பாளரை நாம் சரியாக தெரிவு செய்ய வேண்டும். சில பௌத்த் துறவிகள் மகிந்தவிற்கு ஆதரவுகளை வழங்கி வருகின்றனர்.

ஆனால் அரசு தமக்கு ஆதரவுகளை வழங்கும் பௌத்த துறவிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய்களை வழங்கியதை எம்மால் உறுதிப்படுத்த முடியும்.

நாட்டிற்கு பொன்சேகாவின் சேவை முக்கியமானது. அவரால் அதிக காரியங்களை மேற்கொள்ள முடியும் அவரின் பதவி என்ன என்பது தற்போது முக்கியமல்ல என தெரிவித்துள்ளார். (6)

# டிசம்பர் மாதத்துக்கான மாதாந்த உதவிப்பணம்

(சாவகச்சேரி)


தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன உதவிப் பணத்தினை மாதாந்தம் பெறுவோர், நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான டிசெம்பர் மாதக்கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் உரியவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பதாக பெற்றுக் கொள்ளுமாறும் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.(ஓ-29)

# விவாத அரங்கு 2

## யாழ். குடாநாட்டின் வீதிகளை விஸ்தரிப்பது

**உடனடி அவசியம் ⇄ அவசியமில்லை**

## உடனடியாக அமுல்படுத்த வேண்டும் காலம் கடந்தால் காரியம் நடவாது



நன்றேசெய் இன்றேசெய் பிறகு பின்பு என்பது நடக்காமலும் போகலாம். நடத்த இயலாமலும் போகலாம். சுகாதாரம், போக்குவரத்து வசதி மற்றும் வீதிவிபத்தை தடுத்தல் என்பவற்றிற்கு வீதிகளின் விஸ்தரிப்பு அவசியமும், இன்றியமையாததுமாகும்.

எப்போ செய்திருக்க வேண்டியதை, இப்போதாவது செய்யாவிடின் அது மேலும் பல வித தடங்கல் கட்கு இடமாகலாம். வீதி விஸ்தரிப்பு என்பது மிகவும் சிரமமானதும்-பொது மக்களுக்கும், காணி, கட்டட, வர்த்தக தொழில் புரிவோர்க்கும் பல்வேறு நன்மை, தீமைகளை ஏற்படுத்தக் கூடியதுமாகும்.

இவற்றைப் பொது நோக்குடன் எல்லோர்க்கும் நன்மை பயக்கும் செயற்பாடாக மனதிற்கொண்டு வீதி விஸ்தரிப்பால் பாதிப்புறுபவர்களின் நலனையும் மனதிற்கொண்டு ஆவன செய்தால் நன் முயற்சியாக அமையும். எப்படியாயினும் உடனடியாக இந்த வீதி விஸ்தரிப்பு வேலைகளை ஆரம்பித்தாற்றான், பல்வேறு தடங்கல்களையும் தாண்டி, இயன்றளவு விரைவில் இப்பணியை நிறைவேற்றலாம்.

பொது நலனைக் கருத்திற்கொள்ளாது, சுயநலமே நோக்கமாக கொண்டோரே இன்று எம்மக்கள் மத்தியில் பெரும் பான்மையினராக உள்ளபோது வீதி விஸ்தரிப்பால் ஏற்படக்கூடிய தடங்கல்கள் நிறையவே உள்ளதெனலாம்.

ஒரு எல்லைக் கதியாலுக்காக உயர் நீதிமன்றம் சென்று வழக்காடும் எம்மவர்கள் வீதி விஸ்தரிப்புக்கு எவ்வளவு தூரம் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என்பதன் அவசியம் நன்குபுரியும் எனலாம்.

இன்று உலகம் வேமாக முன்னேறிப் பல வசதிகளையும் நவீனத்துவமாக அனுபவிக்கும் போது எமது பிரதேசம் மட்டும் போக்குவரத்திலும் ஒருவழிப்பாதையாகவும், நல்ல வடிகால்களோ, மேம்பாலங்களோ, மின்சார வசதியோ இன்றித்தொலைக் காட்சியிலேயே இவற்றை நன்கு பார்த்து இரசித்துக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திச் சுயநலம் கருதாது பொதுநலப்பணியாக இந்த வீதி விஸ்தரிப்பு வேலைகளைச் செய்வதன் மூலம் போக்குவரத்து நெரிசல் குறையவும், சுகாதார வசதிகளை நன்முறையில் நடைமுறைப்படுத்தவும் நீர், மின்சாரம் போன்ற செயற்பாடுகளைச் சீரமைக்கவும் வாய்ப்பு உண்டாகும்.

மேலும் தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகளும், தம் அரசியல் எதிர்காலம் கருதியும் மக்களுக்கும்,நாட்டுக்கும் சில நல்லகாரியங்களைச் செய்ய முன் நிற்பார்கள். எனவே இந்தவழியிலும்நாம் அவர்களைப்பயன்படுத்தி கொள்வதுடன் அபிவிருத்தியடையவும் வாய்ப்பு உண்டு ஆகையால்,

யாழ்ப்பாணத்தின் வீதிகளை விஸ்தரித்தல் உடனடியாக அமுல்படுத்தப்படவேண்டும்.

**நீர்வைமணி**

## முதலாம் அமர்வு

## யாழ்ப்பாணத்தின் வீதிகளை தற்போது விஸ்தரித்தல் அவசியமில்லை



யாழ் . குடாநாட்டிலுள்ள வீதிகள் அனைத்தும் 1089.00 சதுரக் கிலோ மீற்றர் நிலத்தில் அமைந்துள்ளன. முக்கிய வீதிகளான யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி 33.44 கிலோ மீற்றர் நீளமும், யாழ்ப்பாணம்-காங்கேசன் துறை வீதி 18.35 கிலோ மீற்றர் நீளமும், யாழ்ப்பாணம்-பொன்னாலை-பருத்தித் துறை வீதி 55.54 கிலோ மீற்றர் நீளமும், யாழ்ப்பாணம்-மானிப்பாய் -காரைநகர் வீதி 27.68 கிலோமீற்றர் நீளமும் , புத்தூர்- மீசாலை வீதி 13.63 கிலோ மீற்றர் நீளமும், புலோலி-கொடிகாமம்-கச்சாய் வீதி 17.52 கிலோ மீற்றர் நீளமும், பருத்தித்துறை -மருதங்கேணி வீதி 30.97 கிலோ மீற்றர் நீளமும் உள்ளன. இவைகளின் மொத்த நீளம் 197.13 கிலோ மீற்றர் ஆக் அளவிடப்பட்டுள்ளது.


நகரசபைகள் , கிராம சபைகளின் எல்லைகளுள் மேலதிகமாக 1900.00 கிலோ மீற்றர் அளவான வீதிகள் உள்ளன. இவ் வீதிகள் பழுதடைந்துள்ளதாகவும் உடனடியாக் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் பத்திரிகைகளில் செய்திகள்வெளியிடப்படுகின்றன.

இவைகளை மட்டும் புனரமைக்க 3/4 அங்குலம், 2 அங்குலம் , 4 அங்குல கற்கள் தேவைப்படுகின்றன. இக்கற்களின் மொத்த அளவு 32 ஆயிரம் கியூப் ஆகும். வீதி வேலைகளுக்கு தக்க தரமான சுண்ணக்கற்களை அகழ்வதற்கு 800 ஏக்கர் நிலத்தினை 2அடி ஆழம் சுண்ணப்பாறைகள் உடைக்கப்பட வேண்டும். இதனால் நிலத்தடி நீரின் வளம் குன்றும். அத்துடன் மழைவீழ்ச்சியும் குன்றி விட்டது.

எனவே யாழ். குடாவில் சுண்ணப் பாறைகள் அகழ்வதை நிறுத்தி , தெற்கில் உள்ள கருங்கற்களை இங்கு கொண்டுவந்து வீதிகளை அமைக்க வேண்டும். அது இப்போது முடியாத காரியமாகவுள்ளது. எனவே யாழ்ப்பாணத்தின் வீதிகளை தற்போது விஸ்தரித்தல் சாத்தியம் இல்லை.

**எந்திரி க.யோகரசா**
**138,திருமகள் வீதி,**
**அரியாலை.**

## வீதி விஸ்தரிப்பு காலத்தின் தேவையாகும்



யாழ்குடா நாட்டில் அண்மைக் கால அனர்த்தங்களினாலும் நாட்டின் நிரந்தரமில்லா சூழ்நிலைகளினாலும் வீதிகள் யாவும் பாரிய சேதத்திற்குள்ளானமை யாவரும் அறிந்ததே.போக்குவரத்து சீர்குலைந்து வீதிகள் சேதமடைந்துள்ள நிலையில் மிகவும் சிரமப் பட்டே மக்கள் பிரயாணஞ் செய்ய வேண்டியுள்ளது.

மாறிவரும் காலத்தின் தேவைக்கேற்ப வாகனங்களின் பாவனையும் அதிகரித்துக் காணப்படுவதால் வீதியை விஸ்தரிக்க வேண்டியதொரு கட்டாயதேவைஏற்பட்டுள்ளது.

முக்கியமாக பாடசாலைச் சிறுவர்கள், அலுவலர்கள், பாதசாரிகள் பயணம் செய்யும் போது நெரிசல்கள் அதிகமாகக் காணப்படுவதால் வீதிகளில் விபத்துக்கள் நேரிடும் சந்தர்ப்பங்கள் தாராளம்.

தினசரிப் பத்திரிகைகளிலும் மற்றும் ஊடகங்களிலும் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் விபத்துக்கள் பற்றி நாம் அன்றாடம் அறியக்கூடிய தகவல்கள் ஏராளம். இந்த விபத்துக்கள் நடப்பதற்கு வீதிகளின் பரப்பளவு குறைவாக உள்ளதே காரணம் எனலாம்.எனவே வீதிகளை விஸ்தரிப்பது கட்டாயமாகும்.

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்.**

## அபிவிருத்தி நோக்கிய பயணத்திற்கு வீதி அகலமாக்குதல் கட்டாயம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 5 நெடுஞ் சாலைகள் அகட்டப்பட வேண்டிய உத்தேசத் தீர்மானம் சரியானதாகும்.

இதற்கான எனது நியாயங்கள் பின்வருமாறு,

❖ வீதி விபத்துக்களை குறைக்க முடியும்.

❖பொருளாதார அபிவிருத்தியின் அச்சாணியாக உள்ள வீதிகள் அகலமாகவும் தரமாகவும் நிர்மாணிக்கப்படுதல் அவசியம்.

❖ கிடைக்கக்கூடிய வெளிநாட்டு உதவிகளைப் பெறும் தருணத்தைச் சரியாகப் பயன்படுத்துதல்.

❖ பொருட்களும் ஆட்களும் வேகமாக இடம் நகர்த்தப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் போது தான் எமது மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

❖உள்ளூராட்சி அமைப்புகளிடம் கட்டட நிர்மாண அனுமதி பெறாமல் கட்டுமானங்களில் ஈடுபட்டவர்களை கண்டிக்க முற்படுதல்.இதன் மூலம் முறையற்ற கட்டடங்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தடுக்கலாம்.

❖பழைமை அடைந்த தரமற்ற வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் தேய்மானங்களை மிக விரைவில் அடைகின்றன. அதனைக் தடுக்க நவீன உத்திகளுடன் வீதிகள் அகலமாக்கப்படுதல் வேண்டும்.


❖ அரசாங்கம் எமது பகுதிக்கு வழங்க முற்படும் அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்வோமானால் தான் பிற அபிவிருத்திகளையும் உள் வாங்கமுடியும்.

❖தென் பகுதி மாவட்டங்களில் அபிவிருத்திக்கு சமாந்தரமாக எமது மாவட்டத்தை விரைவாக கொண்டுசெல்லல்.

❖ ஏ-9 பாதை திறப்பின் நன்மைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றிற்காக வீதி அகலமாக்குதல் அவசியம்.

**வே.தபேந்திரன்**
**கைதடி வடக்கு,**

## இயல்பு வாழ்க்கை ஏற்படும்வரை மக்களை சிரமப்படுத்தாதீர்கள்



வீதி விபத்துக்களைப் குறைப்பதற்கு வீதிகளை விஸ்தரித்தல் வரவேற்கக்கூடியது. ஆனால் வீதிகளை விஸ்தரிப்பதனால் வீதிகளுக்கு அருகே உள்ள கட்டிடங்களை இடிக்கவேண்டும். அதனால் அங்குள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் இருப்பிடங்களை இழக்க வேண்டிவரும்.

போர்ச்சூழல்களினால் முகாம்களில் தங்க வைக்கப்பட்டவர்களில் பலர் யாழ்ப்பாண குடாநாட்டில் குடியேறியுள்ளனர். இப்படிப்பட்ட காலகட்டத்தில் வீதிகளை விஸ்தரிப்பதனால் இருப்பதற்கு மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பர். இது பனையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த நிலையாகிவிடாதா?

இவ்வாறான வீதிகளை விஸ்தரிப்பதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைக்கப்படும். இன்னும் தமிழ் மக்கள் பூரணமாக இயல்பு வாழ்க்கையை வாழவில்லையென்றே கூறலாம்.

ஆகவே மக்கள் அனைவரும் தம்தம் சொந்த இடங்களிற்கு சென்று இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ளும் காலகட்டத்தில் யாழ்ப்பாண வீதிகளை விஸ்தரிக்கலாம். அதுவரை இவ் விஸ்தரித்தலை அமுல் படுத்துவது அவசியமில்லை.

**திருமதி. செ.சீதாலக்சுமி**
**'சாயிவாசா'**
**அரசடி லேன்,**
**ஆத்தியடி,**
**பருத்தித்துறை.**

## விவாத அரங்கு 3

**மாணவர்களின் கல்வி முன்னேற**

**யாழ். குடாநாட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்**

**இணைக்க வேண்டும் ⇄ இணைக்கக் கூடாது**


**உங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி :– 11.12.2009**

குறிப்பு: ஒரு தடவை விவாத அரங்கில் கலந்து கொண்டவர்கள் இன்னொரு விவாத அரங்கில் பங்கேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# மீள்குடியமர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும்

## யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி வழங்க நிறுவனங்களும் பொது அமைப்புக்களும் முன்வர வேண்டுமென கிளிநொச்சி யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் தம்பிப்பிள்ளை யோகானந்தராஜா கேட்டுள்ளார்.

வன்னி மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களில்



மேசைகளுக்கு மேலே உட்கார்ந்திருந்து கல்வி பயிலும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள்

துணுக்காய், பூநகரி உட்பட சில பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அண்மையில் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

அத்துடன் அப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளும் மீளவும் ஆரம்பிக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிளிநொச்சி யோகபுரம் மகா வித்தியாலய அதிபர் தம்பிப்பிள்ளை யோகானந்தராஜா கடந்த வாரம் சந்தித்து மீள்குடியமர்த்தப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பில் வலம்புரிக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்ததாவது,

இடப்பெயர்வு காரணமாக கடந்த ஒன்றரை வருடங்களாக மூடப்பட்டிருந்த யோகபுரம் மகாவித்தியாலயம் மீண்டும்



கல்விச் செயற்பாடுகள் இடம்பெறும் போது

கடந்த மாதம் அதே இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போர் நடவடிக்கைகளினால் எமது பாடசாலைக் கட்டடம் சேதமடைந்துள்ளது. இதுவரைக்கும் திருத்தப்படவில்லை. இதனால் வகுப்பறைகள் மிகப் பற்றாக்குறையாகவுள்ளன.

தற்போது ஆயிரத்து 32 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

எனினும் ஆசிரியர்கள் பலர் பாடசாலைக்கு வந்துசேரவில்லை. இதனால் ஆசிரியர்கள் பற்றாக் குறையுள்ளது.

குறிப்பாக அடுத்த வாரம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு கணிதபாட ஆசிரியர் இல்லாமை பெருங் குறைபாடாகும்.

இதுதொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

அதற்குரிய ஏற்பாடுகளை தாம் உடனடியாக மேற்கொள்வதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனை விட எமது பாடசாலைக்கு தளபாடப் பற்றாக்குறை இருப்பதால் கடந்த வாரம் வரை மாணவர்கள் தறப்பாளில் இருந்தே கல்வி கற்றனர்.

எனினும் கடந்த வியாழக்கிழமை ஆளுநரினால் ஒரு தொகுதி தளபாடங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் நூலகங்களுக்குரிய புத்தகங்கள் உட்பட பாடசாலைக்குரிய உபகரணங்களும் கடந்த வியாழக்கிழமை வருகை தந்த வடக்கு மாகாண மேஜர் ஜெனரல் சந்திரசிறி வழங்கினார்.

இவற்றுக்கு மேலாக மாணவர்களுக்கு முக்கியமான பல பிரச்சினைகள் உள்ளன.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது சகல மாணவர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டன.

எனினும் அவற்றை தைத்துப் போடுவதற்கு நிதிப்பாற்றாக்குறை பிரச்சினையாக இருக்கிறது.

பாடசாலை மாணவர்களின் ஒழுங்கு முறையில் கழுத்துப்பட்டி, சப்பாத்து முக்கியமானவை. ஆனால் எமது பாடசாலையில் தற்போதுள்ள மாணவர்களிடம் இதனை வலியுறுத்த முடியாது.

அவர்களிடம் சாதாரண பாதணியை வாங்குவதற்குக் கூட வசதியில்லை.

இம் மாணவர்களுக்கு உதவி வழங்க முன் வரும் நிறுவனங்கள், அமைப்புக் களை வரவேற்பதுடன் அவர்களிடம் எமது பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்து அதன்மூலம் எமது மாணவச் செல்வங்களின் இடர்பாடுகளை நீக்க பாடசாலைச் சமூகம் தயாராகவுள்ளது.

தற்போது இம் மாணவர்களுடைய கல்வி மற்றும் செயற்பாடுகள் பெரிதும் குறைவாகவுள்ளன.

ஏனவே இழந்த கல்வியை ஈடு செய்வதற்காக பாடசாலையில் மாலைநேர வகுப்புக்களையும் எங்களுடைய ஆசிரியர்கள் நடாத்தி வருகின்றார்கள்.

இச் செயற்பாடுகளின் மூலம் இம் மாணவர்களுக்கு இழந்த கல்வியை மீளப் பெற்றுக்கொடுக்கக் கூடியதாகவுள்ளது.

இதனைவிட எமது பாடசாலைக்கு தொண்டர் ஆசிரியர்களின் சேவை மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது.

எமது பாடசாலையில் கூடுதலான



யுத்தத்தினால் இடிபாடுகளுக்குட்பட்ட யோகபுரம் மகாவித்தியாலய கட்டடத்தின் ஒரு பகுதி

தொண்டர் ஆசிரியர்கள் சேவையாற்று கின்றனர்.

இவர்கள் எந்த வித வேதனமும் இல்லாமல் சேவையாற்றி வருகின்றனர் என்பதுடன் பலர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றுகின்றனர்.

தற்போது யுனிசெவ் நிறுவனம் மாணவர்களுக்கு மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதற்குரிய செயலமர்வு ஒன்றை நடாத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை யுனிசெவ் நிறுவனம் விரைவாக மேற்கொண்டு வருவது வரவேற்கத்தக்கது.

எமது பாடசாலைக்கு சில முக்கியமான கற்பித்தல் உபகரணங்கள் சில தேவைப்படுவதுடன் றோனியோ மிஷின், மின்பிறப்பாக்கி போன்ற சாதனங்களும் மிக அவசியமாகத் தேவைப்படுகிறது.

குறிப்பாக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் எல்லோருமே எமது பாடசாலைக்கு விஜயம் செய்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உற்சாகமளித் துள்ளனர்.

எமது பாடசாலையின் வளர்ச்சி மிக வேகமாக நடைபெறுமென்ற நம்பிக்கையுள்ளது.

இந்த வகையில் மாணவர்களுக்கு உதவக்கூடிய அமைப்புக்கள் மிகவிரைவாக முன்வந்து அவர்களுக்கு உதவிகளை வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

இதுவரை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த வாரத்துடன் மூன்றாம் தவணைக்கான விடுமுறையால் ஜனவரி முதல் மதிய உணவு மாணவர்களுக்கு வழங்கப்படுமென அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.நந்தகுமார் எமது பாடசாலைக்கு வருகை தந்து பல்வேறு வழிகளில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்.

பாடசாலை முழுமையான நேரமும் நடைபெறுகிறது.மாணவர்கள் கல்வி கற்றலில் ஆர்வமாக இருக்கிறார்கள்.மாணவர்களுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. தரம் 6இற்கு மேற்பட்ட மாணவர்கள் தளபாடங்களில் இருக்கக் கூடியதாக காணப்படுகிறது.

தரம் 6 இற்கு கீழ்ப்பட்ட ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான தளபாடங்கள் இதுவரை வந்துசேரவில்லை. மிக விரைவாக வந்துசேரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த மாணவர்கள் மரங்களிற்குக் கீழே இருந்து கல்வி கற்கிறார்கள்.

# போதைப்பொருட்கடத்திய இந்திய சகோதரர்களுக்கு 25 ஆண்டுகள் சிறை

## பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பு

(இங்கிலாந்து)

இங்கிலாந்தில் உள்ள லிசெஸ்டர் பகுதியில் ஈஸ்ட் மிட் லேண்ட்டவுன் என்ற இடத்தைச் சேர்ந்தவர் பாபு நாத சரசியா (வயது 44). இவரது அண்ணன் பரத் ராம் சரசியா (வயது 45).

இவர்கள் இருவரும் வெளி நாட்டு வாழ் இந்தியர்கள் ஆவர். இவர்கள் துருக்கியில் இருந்து இங்கிலாந்துக்கு "ஹெராயின்" என்ற போதைப் பொருளை கார் மூலம் கடத்தி விற்பனை செய்து வந்தனர்.

இவர்களைப் பிடிக்க லிசெஸ்டர் பொலீசார் கண்ணி வைத்து இருந்தனர். அவர்கள் எதிர் பார்த்தது போல் ஹெராயினுடன் வந்த அண்ணன், தம்பியைப் பொலிசார் மடக்கிப் பிடித்து கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 12 கிலோ ஹெராயின் கைப்பற்றப்பட்டது. அதன் மதிப்பு ரூ.9 கோடியே 10 இலட்சம். பொலீசார் பறிமுதல் செய்ததிலேயே இதுதான் அதிக அளவாகும் எனக்குறிப்பிடப்படுகிறது.

இச் சம்பவம் கடந்த 2007ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடந்தது. இதைத் தொடர்ந்து இவர்கள் மீது நாட்டிங்காம் குரவுன் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட பாபுநாத சரசியாவுக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அவரது அண்ணன் பரத் ராம் சரசியாவுக்கு 18 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். (6)

# மனைவியின் எலும்புகளுடன் 5 ஆண்டுகள் உறங்கும் கணவன்

## வியட்நாமில் வியப்பு

(வியட்நாம்)

வியட்நாமில் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒருவர் இறந்த தனது மனைவியின் எலும்புகளோடு படுத்து உறங்கி வருகிறார் என்ற தகவல் அந்நாட்டில் பரவலாக அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது.

ஐம்பது வயதைத் தாண்டிய "வான்" என்ற இந்நபர், தனது மனைவியின் சடலத்தை சவக்குழியிலிருந்து தோண்டி எடுத்து மனைவியைப் போன்ற ஒரு மெழுகு பொம்மையைச் செய்து, அதனுள் அவரது எலும்புகளை வைத்து, அந்தப் பொம்மையை ஒப்பனை எல்லாம் செய்து உடன் வைத்திருப்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

மனைவியின் உருவத்தின் அருகே லிவானும் அத்தம்பதியருடைய 12 வயது மகனும் உடலை அணைத்துக்கொண்டு படுத்திருப்பது போன்ற புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.


இந்த நபர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ, இப்படியான சம்பவங்களைத் தடுப்பதற்கோ தங்களிடம் அதிகாரம் இல்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

ள (6 -

# பட்டாசு வெடித்ததில் தீ விபத்து 112 பேர் பலி; 134 பேர் படுகாயம்

## ரஷ்யாவில் துயரம்






(மாஸ்கோ)

ரஷ்யாவில் இரவு விடுதியொன்றில் பட்டாசு வெடித்தபோது ஏற்பட்ட தீ விபத்தில் 112 பேர் பலியானார்கள். மேலும் 134 பேர் காயம் அடைந்தனர்.

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் இருந்து ஆயிரத்து 200 கிலோ மீற்றர் கிழக்கே பெர்ம் நகரம் உள்ளது. இங்கு சுமார் 10 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள்.

இந்த நகரில் உள்ள இரவு விடுதி ஒன்றில் நடைபெற்ற 8 ஆவது ஆண்டு விழா கொண்டாட்டத்தில் விடுதியின் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது பட்டாசுகள் வெடிக்கப்பட்டன. அப்போது ஒரு பட்டாசு பிளாஸ்டிக் கூரையை தாக்கியதில் தீ விபத்து ஏற்றபட்டது. இதில் 112 பேர் பலியானதுடன் 134 பேர் காயம் அடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் 85 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது .

இந்த சம்பவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இல்லை என பெர்ம் நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6)

# ஓவிய பிதாமகனுக்கு இணையாக இங்கிலாந்தில் 7 வயது சிறுவன்

இங்கிலாந்தின் ஹேறால்ட் நகரைச் சேர்ந்த 7 வயது சிறுவன் கியோரன் வில்லியம்சன். இவன் இப்போதே ஓவிய பிதாமகன் பிகாசோவுக்கு இணையாக பேசப்படுகிறான்.

அண்மையில் ஹேறால்ட் நகரில் நடந்த கண்காட்சியில் 14 நிமிடங்களில் 19 ஓவியங்களை கியோரன் வரைந்து தள்ளினான்.

இந்த ஓவிய்ங்கள் அனைத்தும் 14 இலட்ச ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டு சாதனை படைத்துள்ளது.

மேலும் இவனது ஓவியங்களுக்கு ஜப்பான், கனடா நாடுகளில் நல்ல வரவேற்பு கிடைத்து இருக்கிறது. இவனது ஒவ்வொரு ஓவியமும் இங்கு 80 ஆயிரம் ரூபாய் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வ்ரை விற்பனையாகிறது. (8-6)

# செயற்கை கண் பரிசோதனை வெற்றி லண்டன் மருத்துவர்கள் சாதனை

(லண்டன்)

பிரிட்டனைச் சேர்ந்த மருத்துவர்கள் 51 வயது நபருக்கு இயந்திர தொழில் நுட்பத்தில் இயங்கும் செயற்கை கண்ணை (பயோனிக் ஐ) பொருத்தியுள்ளனர்.

லண்டனில் உள்ள மான்செஸ்டர்ரோயல் கண் மருத்துவமனை 32 பேருக்கு சோதனை ரீதியாக இயந்திர தொழில் நுட்பத்துடன் கூடிய செயற்கை கண்ணை (பயோனிக் ஐ) பொருத்தி சோதனை செய்து வருகிறது. மூக்கு கண்ணாடி மீது கமரா மற்றும் ரிசீவர் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த கமரா மூலம் பார்க்கப்படும் உருவங்கள் ரிசீவரில் பெறப்பட்டு கண்ணின் விழித்திரையின் மீது பொருத்தப்பட்டுள்ள மெல்லிய எலக் ரோடு மற்றும் வயர் வழியாக கண்ணுக்குள் செலுத்தப்படுகிறது. இதன் மூலம் கண்பார்வையற்றவர்கள் பிம்பங்களை அறிய முடிகிறது .51 வயதான பீட்டர் லேன் என்பவருக்கு இந்த செயற்கை கண் (பயோனிக் ஐ) பொருத்தப்பட்டு பரிசோதனை நடந்து வருகிறது.

இந்த செயற்கை கண் மூலம் சிறிய வார்த்தைகளை படிக்க முடிவதாகவும் கார், பஸ் போன்ற வாகனங்களின் அவுட் லைன் மட்டும் தெரிவதாகவும் இருண்டு கிடந்த கண்ணுக்கு இது போன்ற பிம்பங்கள் தெரிவது மகிழ்ச்சி அளிப்பதாகவும் பீட்டர் லேன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்த மருத்துவமனை விஞ்ஞானிகள் குறிப்பிடுகையில் முதல் கட்டமாக தயாரிக்கப்பட்ட இந்த பயோனிக் கண்ணில் நல்ல பலன் தெரிவது மகிழ்ச்சியளிக்கிறது. இருப்பினும் தொழில்நுட்ப ரீதியாக இதில் நிறைய வேலைகளை செய்ய வேண்டியுள்ளது என்றனர். (6-8)




# இரத்தக் குழாய் அடைப்பை நீக்க செயற்கை துகள்கள் கண்டுபிடிப்பு

(நியூயோர்க்)

இரத்த குழாயில் கொழுப்பு சேர்ந்து அடைப்பு ஏற்படுவதை தடுக்க புதிய நானோ துகள்களை விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர். இரத்தத்தில் கொழுப்பை சுமந்து செல்லும் துகள்கள் இரத்த குழாயில் படிந்து விட்டால் அதை கெட்ட கொழுப்பு என்றும் கொழுப்பை கல்லீரல் வரை எடுத்து சென்றால் அதை நல்ல கொழுப்பு என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் ஆன்ட்ரீ நெல் தலைமையிலான விஞ்ஞானிகள் நானோ தொழில் நுட்பத்தில் தங்கத்தை சேர்த்து செயற்கை துகள்களை உருவாக்கியுள்ளனர். இந்த செயற்கை துகள்களை இரத்தத்தில் செலுத்தினால் அவை இரத்தக் குழாயில் அடைப்பு ஏற்படாமல் செய்கிறது.

அதுமட்டுமல்லாது இரத்தகுழாயில் படிந்துள்ள கொழுப்பையும் சுத்தம் செய்கிறது. தற்போது சோதனைக்கூட அளவில் இருக்கும் இந்த துகள்களை பல விதங்களிலும் பயன்படுத்துவது குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். (8-6)

# பன்றிக் காய்ச்சலுக்கு ஒரு வாரத்தில் ஆயிரம் பேர் பலி

## உலக சுகாதார நிறுவனம் தகவல்

(ஜெனீவா)

பன்றிக் காய்ச்சலுக்கு ஒரு வாரத்தில், மட்டும் ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர் என்று உலக சுகாதார அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் இறுதி வாரத்தில் மட்டும், பன்றிக்காய்ச்சலுக்கு 7 ஆயிரத்து 826 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் பரவிய பன்றிக்காய்ச்சல், அமெரிக்கர்வில் மட்டும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பாவில் சுவீடன், நோர்வே, மோல்டோவா, இத்தாலி ஆகிய நாடுகளையும் பன்றிக்காய்ச்சல் பாதித்துள்ளது. பெல்ஜியம், அயர்லாந்து, செர்பிய நாடுகளை அதிகம் பாதித்துள்ளது.

உலகத்தின் தென் துருவ நாடுகள் குறைந்த அளவே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது.

கடந்த வாரத்தில் மட்டும் பலியானவர்களில், பாதிக்கு மேற்பட்டோர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

ஹஜ் யாத்திரிகர்களையும் பன்றிக் காய்ச்சல் விட்டுவைக்கவில்லை. இதுவரை, ஐந்து பேர் பலியாகி உள்ளனர் என்று தெரிவித்துள்ளது. (6)

# ஒரு வாரத்துக்குரிய மழை ஒரேநாளில் பிரேஸிலில் கடுமையான பாதிப்பு

பிறேசில் நாட்டின் சாவ் பாலோ மாகாணத்தில் கடும் மழை மற்றும் சூறாவளியால் நிலச்சரிவு ஏற்பட்டு 15 பேர் பலியாகினர்.

இந்த மாகாணம் கடந்த வாரம் முழுவதும் கடும் மழை மற்றும் சூறாவளியால் பாதிக்கப்பட்டது. தலைநகரான சாவ்பாலோ நகரின் கிழக்குப் பகுதியிலும், வேறு சில இடங்களிலும் நிலச்சரிவு ஏற்பட்டது. பல இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்தன.

இதில், ஐந்து முதல் 14 வயதுக்குட்பட்ட ஐந்து குழந்தைகள் உட்பட 15 பேர் மண்ணில் புதைந்தும், இடிபாடுகளில் சிக்கியும் இறந்தனர்.

மழையால் பல இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. ரயில் போக்குவரத்தும் பாதித்தது.

ஒரு வாரத்திற்கு பெய்ய வேண்டிய மழை ஒரு நாளில் நான்கு மணி நேரத்தில் பெய்ததால், இந்தப் பாதிப்பு ஏற்பட்டதாக வானிலை ஆய்வு மையத்தினர் தெரிவித்துள்ளனர். (6)





திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்ல பாலர் கலைவிழாவில் மாணவர்களின் காவடி ஆட்டம், அபிநய நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

## ஸ்ரீ சாரதா தேவியின் 157 ஆவது ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 157 ஆவது ஜெயந்தி விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சமிதியின் உபசெயலாளர் திருமதி ஜெயதேவி ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி ஜி.பவானி கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து இராமகிருஷ்ண சமிதியின் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும், பேச்சுப் போட்டி, தனி நடிப்புப் போட்டி என்பவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுவழங்கலும், யோகாசன, தியானப் பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-9)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் குட்டியப்புலம் அ.த.க.பாடசாலையின் "தேனீ" சஞ்சிகை வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் செ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி வி.கந்தையா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் சி.சுத்தானந்தம் முதற் பிரதி பெறவுள்ளார். (6-9)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் கார்த்திகை மாத மக நட்சத்திரத் தினத்தன்று யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தி வரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

குருபூசையைத் தொடர்ந்து தேவாரப் பாராயணம், சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகள் நடைபெறுமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (6)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் 12 இற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கணிதவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப்பபணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (6-4-19)

# மீள்குடியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்த்தப்பட்ட விவசாயிகளுக்கான நீரிறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வட மாகாண விவசாய, காணி,கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்வளத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், திட்டமிடலாளரும் யாழ்.மாவட்ட இணைப்பாளருமான வி. செ. சுவாமிநாதன், விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என். ஏ.ஜெயராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட 175 விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கையினை மீள ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்குடன் அவர்களுக்கு 50 வீத மானிய அடிப்படையில் 110 எட்னா நீரிறைக்கும் இயந்திரங்களும், 65 றொபின் நீரிறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் விவசாய உற்பத்திகளின் பெறுமான அதிகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் மாதர் அமைப்புக்களை வலுவூட்டும் நோக்குடன் சாவகச்சேரி, கரவெட்டி, உரும்பிராய், வேலணை ஆகிய மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களிற்கு நான்கு சிறிய ரக மாவரைக்கும் இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன. (6-9)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை மதியம் 12.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (8-4-29)

## கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய முறைசாராக் கல்வி பிரிவினர் நடத்தும் "கண்காட்சியும் விற்பனையும்" இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யா/நல்லூர் சி.சி.த.க பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம், வடமாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.நடராஜா, நல்லூர் ஸ்தான சி.சி. த.க. பாடசாலை அதிபர் எஸ்.ஞானேஸ்வரன், யுனிசெவ் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட செயற்றிட்ட உத்தியோகத்தர் செல்வி வே. ராதிகா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-9)

## மீளக்குடியமர்ந்தவர்களுக்கு பொருட்கள் விநியோகம்

(சாவகச்சேரி)

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு தென்மராட்சிப் பகுதியில் சொந்த வீடுகளிலும், உறவினர்களுடனும் தங்கியுள்ள குடும்பங்களிற்கு அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தினர் உணவுப்பொருள் அல்லாத பொருட்களை விநியோகித்து வருகின்றனர்.

இதில் குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கைக்கேற்ப தறப்பாள், தண்ணீர் கொள்கலன்கள், கோடரி, அலவாங்கு, வாளி, நைலோன் கயிறு, லாம்பு, தமிழக அரசால் வழங்கப்பட்ட சமையல் பாத்திரங்கள், பாய்கள் போன்ற பொருட்களும் வழங்கப்படுகின்றன.

மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 20 ஆயிரம் ரூபா வங்கிக் கணக்கில் இடப்படுகின்றது.

இதற்கான பதிவுகள் அனைத்தும் சாவகச்சேரி சிவன்கோவிலடியில் வைத்து கடந்த இரண்டு தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-29)

## மாணவர் சஞ்சிகை வெளியீட்டு விழா

(அல்வாய்)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் "தமிழருவி" மாணவர் சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் சஞ்சிகைப் பொறுப்பாசிரியர் க.முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந் தினராக இலங்கை வங்கியின் வட பிராந்திய பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். தொடர்ந்து சஞ்சிகை வெளி யீட்டுரையை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் வழங்கவுள்ளதுடன் மதிப்பீட்டுரையை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ந.கல்யாணி வழங்கவுள்ளார். (6-9-19)

## ஒளிவிழா நிகழ்வுகள்

(அல்வாய்)

யா/ பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் வே. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பொலிகண்டி பங்குத்தந்தை அருட்திரு. பத்திநாதர் அடிகளார் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் தொடர்ந்து நத்தார் பாப்பா வருகையும், மாணவர்களின் கலை நிகழ் வுகளும் இடம் பெறவுள்ளன. (6-9-19)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் மன்றம் நடத்தும் ஒளி விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் செல்வன் நே.கென்ஸ்ஜெரோன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உரும்பிராய் புனித மிக்கேல் தேவாலய பங்குத்தந்தை அருட்திரு செ.யூட்நிக்ஷன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் அன்ரனி பீற்றர், கௌரவ விருந்தினராக கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் மன்றம் நடத்தும் ஒளி விழா இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யா / பத்திரிசியார் கல்லூரி அதிபர் வணபிதா. ஜெறோ செல்வநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசிச் செய்தியை நாவாந்துறை பங்குத்தந்தை வணபிதா பி.எவ்.இராஜசிங்கம் வழங்கவுள்ளார்.

விழாவில் வரவேற்பு நடனம், பாடல், பேச்சு,கவிதை, கோலாட்டம், நத்தார் தாத்தா வருகை போன்ற கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (9)




## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையில் இன்று திங்கட்கிழமை நல்லூர் பொதுச்சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9மணி தொடக்கம் 11 மணிவரை நல்லூர் குறுக்கு வீதி, நாவலர் வீதிச் சந்தியிலும் நண்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி முதல் 11 மணிவரை கொய்யாத் தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும் நண்பகல் 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை சுண்டுக்குளி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

மேலும் அரியாலை பொதுச்சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி முதல் 11 மணிவரை நல்லூர் மருதடி லேன் பாப்பையா கடையடியிலும் நண்பகல் 11.30 மணியிலிருந்து 1.30 மணிவரை கண்டிவீதி பென்ரிபோஸ் லேன் அருகிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத்தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுள்ளார். (6-9)










வைத்திய கலாநிதி ஆ.பேரின்பநாதனின் "பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு", "வாழ்வியல் கல்வி" ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா புங்குடுதீவில் இடம்பெற்ற போது தீவக வலய கல்விப்பணிப்பாளர் வி.இராதாகிருஸ்ணன் தலைமையுரை ஆற்றுவதையும்,புங்குடுதீவு சிவன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ நா.அருணோதயக்குருக்கள் ஆசியுரை வழங்குவதையும், ஈ.பி.டி.பியின் தீவகப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட அமைப்பாளர் உதயன் மற்றும் சிவானந்தினி துரைசிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவதையும் , நூலாசிரியர் ஆ.பேரின்பநாதன் ஏற்புரை நிகழ்த்துவதையும்,புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய அதிபர் ந.நாகராசா நன்றியுரை நிகழ்த்துவதையும் நூலின் முதல் பிரதியை பிரதம விருந்தினரிடம் இருந்து ஓய்வு பெற்ற அதிபர் ந.இராசதுரை பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

### தென்பகுதி காவல் நிலையங்களில் மக்கள் தொடர்பாளர்களாக தமிழ் உத்தியோகத்தர்கள் நியமனம்

## பஷில் ராஜபக்ஷ உறுதி

(கொழும்பு)

தென்பகுதியிலுள்ள தமிழ் மக்களின் நலன் கருதி அங்குள்ள பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாண புனர்வாழ்வு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஷில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

பஷில் ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிரதிநிதிகள் குழு கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை அலரிமாளிகையில்அவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது தென் பகுதியிலுள்ள தமிழ் மக்களின் நலன்கருதி அங்குள்ள பொலிஸ் நிலையங்களில் பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்களை நியமனம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இந்து மாமன்றத்தின் பிரதிநிதிகள் குழு முன் வைத்தது. இதற்கு இளைப்பாறிய தமிழ் அரச ஊழியர்களை நியமிக்கலாம் என்றும் அவர்களது பெயர்களை திரட்டித் தருமாறும் கௌரவ பஷில் ராஜபக்ஷ இந்து மாமன்றப் பிரதிநிதிகள் குழுவிடம் கேட்டுள்ளார்.(6)

# தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படும் புலிகளின் சொத்து தொடர்பான தகவல்கள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச பொறுப்பாளராக இருந்த குமரன் பத்மநாதனிடம் புலிகளின் சொத்துக்கள் தொடர்பான தகவல்களை அறிய அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் முனைப்புக் காட்டி வருகின்றன. இது தேர்தலை நோக்காக் கொண்ட நடவடிக்கையே எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் உலகளாவிய ரீதியில் இரண்டாயிரம் வங்கிக் கணக்குகள் உள்ளதாகவும் அமெரிக்காவின் வில் செயாட் பௌல்வேட் உட்பட்ட வெளிநாடுகளில் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையம் கூட இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அரசாங்கம் எந்தத் தகவலையும் வெளியிடாமல் இருந்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. எனினும் அரசாங்கம் இந்த சவாலை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும் அண்மையில் இது தொடர்பாக தகவல் வெளியிட்டிருந்த அரசாங்க பாதுகாப்பு பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல குமரன் பத்மநாதனுக்கு சொந்தமான 3 கப்பல்களை இலங்கைக்கு கொண்டு வர இலங்கை அரசாங்கம் முயற்சிப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் அரசாங்கமும் எதிர்க் கட்சிகளும் குமரன் பத்மநாதன் புரிந்ததாக குற்றம் சுமத்திவரும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் ஏன் சொத்துக்கள் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலே காரணம் என நம்பப்படுகிறது. ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் இதனை தமது தேர்தல் பிரசாரங்களுக்காகப் பயன்படுத்தி வருகின்றன. (6)

### இலங்கையில் ஊடகவியலாளர்களின்

# கொலைகளுக்கு காரணமானவர்களே எங்கள் மீது பழியை போடுகிறார்கள்

### கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கையில் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமையின் பின்னணி தமக்கு தெரிந்திருந்த போதும் இராணுவ தளபதிகளை காப்பாற்றும் முகமாகவே அதனை வெளிப்படுத்தவில்லை என பாதுகாப்பு செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா ஊடக சுதந்திரம் குறித்து கருத்துரைத்து வருகின்ற நிலையிலேயே இந்த தகவலை கோத்தபாய வெளியிட்டுள்ளார்.

பல ஊடகவியலாளர்கள் இலங்கையில் கொலை செய்யப்பட்டனர். இதில் சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்கிரம துங்கவும் அடங்குகிறார். இவரின் கொலை தொடர்பில் பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் யார் என்ற விடையம் தமக்கு தெரியும் என்ற போதும் அதனை தற்போதும் வெளியிடமுடியாது என கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சரத் பொன்சேகா ஊடக சுதந்திரம் தொடர்பாக பேசி வருவதால் அதனை பற்றிக் கதைப்பது கட்டாயமாகிவிட்டது என கோத்தபாய தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த குற்றச் சாட்டுக்கள் யாவும் தம்மீதே சுமத்தப்பட்டு வந்ததாக கோத்தபாய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் 2006ஆம் ஆண்டுக்கும் 2008 ஆம் ஆண்டுக்கும் இடையிலான காலப் பகுதியில் மட்டும் 16 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் 39 பேர் தாக்குதல்களுக்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது. (6)


யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழா-2009

இவர்களுடன் 119 புள்ளிகள் பெற்ற அ.டிலக்சனா ஆகியோரை பாராட்டுவதுடன் மேலும் பல சாதனைகள் படைக்க மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம். இம் மாணவர்கள் எமது பாடசாலைக்கும், கிராமத்திற்கும் பெருமை சேர்த்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். இவர்களது வெற்றிக்குதவிய உள்ளங்களுக்கும் நன்றிகள்.

பாடசாலைச் சமூகம்
யா/கொக்குவில் ஸ்ரீ
ஞானபண்டித வித்தியாசாலை


த.லிரோயா
153 புள்ளிகள்


ஆ.காயத்திரி
145 புள்ளிகள்


க.கோபிகா
150 புள்ளிகள் (முல்லைத்தீவு)

(C-3858)

# மேல்மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை - 2009

# பயிற்சி வினாத்தாள் - சைவநெறி

**பகுதி - I, II** **நேரம் 01 மணித்தியாலம்**

## பகுதி - I

(தொடர்ச்சி)

31. இலங்கை வரலாற்றில் பொலநறுவைக் காலப்பகுதி,
    1. கி.பி - 10 முதல் கி.பி. - 13 வரை
    2. கி.மு. - 10 முதல் கி.மு. - 13 வரை
    3. கி.பி. - 15 முதல் கி.மு. - 18 வரை
    4. கி.பி. - 12 க்குப் பிற்பட்ட காலம்

32. "வைஜயந்தி சூத்திரம்" என்னும் சிற்ப நூல் எழுதப்பட்ட காலம்,
    1. அனுராதபுரக் காலம் 2. பொலநறுவைக் காலம்
    3. சிகிரியாக் காலம் 4. யாழ்ப்பாண ராச்சிய காலம்

33. யாழ்ப்பாணத்தில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள இடம்,
    1. கொக்குவில் 2. இணுவில்
    3. கோண்டாவில் 4. மானிப்பாய்

34. கிழக்கு இலங்கையில் முருகனது பிரதிஷ்டை செய்யப்பட்ட திருத்தலங்கள்,
    1. வேற்படை ஆலயங்கள்
    2. திருப்படைக் கோயில்கள்
    3. அறுபடை வீட்டுக்கோயில்கள்
    4. முருகன் கோயில்கள்

    என அழைப்பது மரபாக வந்துள்ளது.

35. இலங்கையில் ஒல்லாந்தர் காலப்பகுதியாக அமைவது,
    1. 1658-1796 2. 1667-1750 3. 1505-1658 4. 1625-1796

36. யாழ். பல்கலைக்கழகத்தில் முதல் முதலாக இந்து நாகரிகத்துறையை ஆரம்பித்து வைத்தவர்,
    1. பேராசிரியர் சு. வித்தியானந்தன்
    2. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்.
    3. பேராசிரியர் கா. கைலாசபதி
    4. பேராசிரியர் ஆ. சதாசிவம்

37. "ஆத்மஜோதி" எனும் மாதாந்த சமய சஞ்சிகையை வெளியிட்டவர்,
    1. முருகேசு சுவாமிகள்
    2. தந்திரதேவா சுவாமிகள்
    3. ஏழாலையூர் நா. முத்தையா அவர்கள்
    4. யோகர் சுவாமிகள்

38. இராவணன் மனைவி மண்டோதரி வழிபட்ட திருத்தலம்,
    1. திருக்கோணேஸ்வரம் 2. திருக்கேதீச்சரம்
    3. முன்னேஸ்வரம் 4. நகுலேஸ்வரம்

39. இலங்கையில் தினமும் நித்தியாக்கினி வளர்க்கப்பட்டு நித்திய உற்சவமும், ஆறுகாலப் பூசையும் நடைபெறும் ஆலயம்,
    1. மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம்
    2. கொச்சிக்கடை பொன்னம்பலவாணேச்சரம்
    3. கொக்கட்டிச் சோலைதான்தோன்றியீச்சரம்
    4. திருக்கோணேச்சரம்.

40. "கந்தர் கலிவெண்பா" எனும் நூலை இயற்றியவர்,
    1. குமரகுருபர சுவாமிகள் 2. அருணகிரிநாதர்
    3. தாயுமானவர் 4. ஞானப்பிரகாச சுவாமிகள்

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும் விரும்பிய எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

(1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
- I "விசார சருமர்" என்னும் இளமைப் பெயருடையவர் யார்? அவரது பெற்றொர் யாவர்?
- II சைவ மக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகள் எவை?
- III தெட்சிணாயன காலத்தில் சூரியன் சுழற்சி எவ்வாறிருக்கும?
- IV "தீபாவளி" என்னும் பதத்தின் பொருள் என்ன?
- V "ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை ........" எனப் பாடியவர் யார்? இப்பாடல் வரி எப்பாடற்தொகுதியில் இடம்பெறுகிறது?
- VI புறச்சந்தான குரவர்களுள் முதல்வராக விளங்கியவர் யார்? அவரது நூலின் பெயர் என்ன?
- VII சைவ மக்களாற் போற்றப்படும் தமிழ்மொழிப் புராணங்கள் இரண்டின் பெயர் தருக?
- VIII காரைதீவு கண்ணகையம்மன் ஆலயத்தின் சிறப்பான விழாவாக அமைவது எது? இவ்விழாவிற்குத் தலைமை தாங்குபவர் யார்?
- IX கண்டி இராச்சியத்தினை நாயக்க மன்னர்கள் ஆட்சி செய்த பொழுது சிறப்புற்று விளங்கிய ஆலயங்களில் இரண்டினை எழுதுக.
- X "உத்தம சோழேச்சரம்" என்னும் ஆலயம் எங்கே அமைந்திருந் ததாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன?

02. பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரை எழுதுக. அவற்றைப் பாடியோர், பாடப்பட்ட சந்தர்ப்பம் என்பவற்றை எழுதுக.
- I "சிறையாரு மடக்கிளியே ................................"
- II "சங்கநிதி பதுமநிதி ................................"
- III "கோலமால்வரை ................................"
- IV "ஆதியும் அந்தமும் இல்லா ................................"
- V "விநாயகனே வெவ்வினையை ................................"

03. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"
- I ஆலயக் கிரியைகள் பற்றிக்கூறும் நூல்கள் எவை?
- II ஆலயங்களில் நிகழும் ஆறுகாலப் பூசைக்காலங்களை எழுதுக?
- III மகேற்சவக் கிரியைகளில் முக்கியத்துவம் பெறும் அம்சங்கள் எவை?
- IV ஆலயங்களில் மகோற்சவம் நடைபெறுவதால் ஊர் மக்கள் அடையும் நன்மைகள் எவை?

04.
- I இதிகாசங்கள் எவை? இவற்றுள் அடங்கியுள்ள பண்புகளில் இரண்டினை எழுதுக?
- II சமய இலக்கியமாகவும் சைவக் காப்பியமாகவும் அமைந்த நூல் எது? அதனை இயற்றியவர் யார்?
- III கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட நூல் எது? அந்நூல் எத்தனை காண்டங்களையுடையது?
- IV "போயின அகந்தை போதம் புகுந்தன வலத்ததான தூயதோர் தோளும் கண்ணும் துடித்தன......." என்னும் பக்தி உணர்வு யாருக்கு ஏற்பட்டது?

05.
- I சம்பந்தர் பெருமான் திருமருகல் எனும் திருப்பதியிற் செய்த அற்புதம் என்ன? அங்கே பாடிய திருப்பதிகம் என்ன?
- II "மட்டிட்ட புன்னை ........" எனும் திருப்பதிகம் எச்சந்தர்ப்பத்தில் யாராற் பாடப்பட்டது?
- III "திருக்களிற்றுப் படியார்" எனும் நூல் போற்றிய சமயகுரவர் யார்?
- IV திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்கள் யாரால் பாடப்பட்டவை?

06.
- I புறச் சந்தான குரவர்கள் யாவர்?
- II "சிவஞான சித்தியார்" எனும் நூலை இயற்றியவர் யார்?
- III "பட்டகட்டையிற் பகற்குருடு" எனக் குறிப்பிடப்பட்ட சந்தானகுரவர் யார்?
- IV சித்தாந்த அட்டகத்துள் அடங்கும் நூல்கள் எவை?

07.
- I நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் பெண் தெய்வங்கள் மூன்றின் பெயர் தருக?
- II நாட்டார் வழிபாட்டில் அம்மனுக்கு வழங்கப்படும் பல்வேறு திருநாமங்களில் மூன்று எழுதுக?
- III வன்னிப்பிரதேசத்தில் அல்லது மட்டக்களப்புப் பிரதேசத்தில் இடம்பெறும் அம்மன் வழிபாட்டுமுறை ஒழுங்குகளில் நான்கினை எழுதுக?
- IV கிராமியச் சடங்குகளின் போது நிகழ்த்தப்படும் கலை நிகழ்வுகள் யாவை?

உலகின் பிரச்சினையை தீர்க்கப் பிறந்தவன் அல்லன் மனிதன். தான் செய்ய வேண்டியதைக் தெரிந்து கொண்டு கருணை எல்லைக்குட்பட்டு அதைச் செய்யவே பிறந்தான் அவன் ~ கதே

வலம்புரி

# ஓ! எனதருமைத் தேர்தலே நீ வருடந்தோறும் வாராயோ

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகியதைத் தொடர்ந்து 'அரசியல்' மாற்றம் கண்டுள்ளது.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மக்கள் தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்ல முடியும் என்ற அறிவிப்பு சர்வசாதாரணமாக வெளியிடப்பட்டது.

உலக அமைப்புகள் முழுவதும் கத்திக் கதறி தமிழ் மக்களை இப்படியெல்லாம் வதைக்காதீர்கள் என்று கூறியபோது அதை சர்வதேசத்தின் தலையீடாகக் கருதிய அரசு,

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகியதும் தமிழ் மக்கள் மீது பற்றுக் கொண்டது போல் நடந்து கொள்கிறது.

முகாம் மக்கள் வெளியில் நடமாட முடியும் என்ற அறிவிப்பு, அதற்கு அடுத்தபடியாக மதவாச்சியில் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தம் என்ற அறிவிப்பு. இப்படியே தேர்தல் சலுகைகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

ஆக, இலங்கை ஆட்சியாளர்கள் தமது பதவிக்காக எதையும் செய்வார்கள். ஆனால் தமிழ் மக்களின் உரிமை என்பது பற்றி எல்லாம் அவர்களுக்கு அக்கறையில்லை என்பது தெளிவாகியுள்ளது.

அதே நேரம் ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுமாக இருந்தால் முகாம் வாழ்க்கை தொடர்ந்திருக்கும் என்ற உண்மையையும் நாம் மறந்துவிட முடியாது.

முகாம் மக்கள் பட்ட துன்பத்தை நீக்குவதற்கு இறைவன் திருவுளம் கொண்டான். எத்தனையோ மனிதர்களின் பிரார்த்தனைக்கு இசைந்த இறைவன் தேர்தல் ஊடாக தன் திருவிளையாடலை ஆரம்பித்தான்.

இன்னமும் ஒன்றரையாண்டுகள் பதவி நீடிக்கக் கூடியதாக இருந்த போதிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற சிந்தனையை மகிந்த ராஜபக்ஷவின் சிந்தனையாக இறைவன் ஆக்கினான்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே தன்னை எதிர்த்துப் போட்டியிடுவார் என்றும் அவரை மிக எளிதாக வெற்றிக்கொள்ள முடியும் என்பதும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நினைப்பு.

அதன் காரணமாகவே அவர் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே அறிவித்திருந்தார். ஆனால் நிலைமை மாறிவிட்டது.

யுத்த வெற்றியில் பங்கு கேட்கக் கூடிய ஜெனரல் சரத் பொன்சேகா, மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட முடிவு செய்தார். இப்போது அரசியல் மாற்றமுற முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களை சுதந்திரமாக நடமாட விடவேண்டிய தேவை உருவானது.

எப்படியிருக்கிறது இறைவனின் திருவிளையாடல்.

அவனின் அந்த அற்புதம் இத்தோடு முடியும் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். நடந்து முடிந்த யுத்தத்தின் அத்தனை இரகசியங்களையும் தேர்தலில் போட்டியிடும் இருதரப்புமே மாறி மாறி வெளிப்படுத்தும்.

அடடா இந்த மாதிரியான சந்தர்ப்பம் இறைவனைத் தவிர வேறு யாரால் தரமுடியும்? எல்லாம் அவன் செய்வான். அவனை நம்பு வோம்.

ஆனாலும் அந்த இறைவனாலும் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகளை திருத்த முடியாமல் இருக்கிறதே, அதற்கான காரணம் யாதோ!

# ஆயுதக் கொள்வனவுக்கு எதிர்ப்பு தெரிவித்தமையே ராஜபக்ஷ சகோதரர்களுடனான முறுகலுக்கு காரணம்

## ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

பெருந்தொகையான ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைக்கு எதிர்ப்பை வெளியிட்ட காரணத்தினால் ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் தமக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதாக முன்னாள் இராணுவப் படைத் தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்த நிறைவின் பின்னர் சீனாவிடமிருந்து பெருந்தொகையான எறிகணைகளை கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டதாகவும் அதற்கு தாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டதாகவும் ஜெனரல் சரத்பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

சீனாவுடனான இந்த கொடுக்கல் வாங்கல்கள் 300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியானது எனவும் அரசாங்கத்திற்கு சொந்தமான லங்கா லொஜிஸ்டிக் எண்ட் டெக்னோலஜி நிறுவனத்தினால் ஆயுதக் கொள்வனவு செய்யப்பட விருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த கொடுக்கல் வாங்கல்களுக்கு தாம் கடுமையாக எதிர்ப்பு வெளியிட்டமை ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கும் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் இடையிலான முறுகல் நிலையை மேலும் வலுப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்படவிருந்த ஆயுதங்கள் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அவசியப்படாது என தாம் வலியுறுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆயுதக் கொள்வனவு குறித்த பாதுகாப்பு அமைச்சின் யோசனையை தாம் நிராகரித்ததாகவும் திட்டமிடப்பட்டதனை விடவும் யுத்தம் சீக்கிரத்தில் நிறைவடைந்த காரணத்தினால் ஆயுதக் கொள்வனவிற்கு அவசியமில்லை என தாம் சுட்டிக்காட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் கருத்துக்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பதில் கருத்து பெற்றுக்கொள்ளும் முயற்சி தோல்வியடைந்ததாக அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (6)

# பொன்சேகாவுக்கு ஆதரவாக பிரசாரங்களை ஐ.தே. கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து முன்னெடுக்கத் திட்டம்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் கூட்டாக இணைந்து பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவான பிரச்சாரங்களை முன்னெடுக்கத் திட்ட மிட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி கண்டியில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கான உத்தியோகபூர்வ பிரச்சாரங்கள் ஆரம்பமாகும் எனவும், நாடு முழுவதிலும் தனித்தனியாகவும், கூட்டாக இணைந்தும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் முன் னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கூட்டாக இணைந்து சுவரொட்டிப் பிரச்சாரம் ஒன்றை மேற்கொள்ளும் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு கிழக்கிலும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-6)

# யாழ்ப்பாணத்தில் படையினர் தொகை குறைக்கப்படல் வேண்டும்

## த.தே.கூ. கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாட்டில் சுமார் 40 ஆயிரம் துருப்பினர் நிலைகொண்டுள்ளதாகவும் அந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

40 ஆயிரம் படைவீரர்கள் யாழ்ப்பாண குடாநாட்டில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்த எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும் அல்லது சில இடங்களில் மட்டும் படையினரின் பிரசன்னத்தை வரையறுக்க வேண்டும் என்றும் யுத்தம் முடிபடைந்த ஆறுமாத காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் எவ்வித செயற்பாடுகளும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பதிவாக இல்லையெனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் இராணுவத்தினரின் பல்வேறு பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு ஆளாகிவருவதாகவும் பெரும்தொகையான படைவீரார்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ள காரணத்தினால் சுதந்திர இடம் நகர்விற்கான சந்தர்ப்பத்தினை மக்கள் இழந்துள்ளனர்.

இயல்பு நிலைமைக்கு திரும்பியதன் பின்னரும் பாரியளவு படைவீரர்களை யாழ்ப்பாணத்தில் குவிக்க வேண்டிய அவசியம் இல்லை. யுத்தகாலத்தில் பெருந்தொகையான படைவீரர்களின் பிரசன்னம் இன்றியமையாது என்ற போதிலும் தற்போது நிலைமைகள் மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சகல பகுதிகளிலும் நிலைநிறுத்தப்பட்டுள்ள படைவீரர்களினால் சோதனைச் சாவடிகளில் தொடர்ச்சியாக சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



உன்னிடம் அறிவு இருந்து, மற்றொருவன் பலவீனனாக இருப்பதை நீ பார்த்தால், அதற்காக அவனை நீ கண்டிக்காதே. உனக்கு இயலுமானால் அவனுடைய நிலைக்கு இறங்கிச் சென்று அவனுக்கு நீ உதவி செய். தானாகவே அவன் வளர்ச்சி பெறவேண்டும். நான் அவனுடைய தலைக்குள் 5 மணி நேரத்தில் ஐந்து கூடை அறிவைத் திணித்து விடுவேன். ஆனால், அதனால் என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது? அவன் முன்பு இருந்ததைவிட மேலும் சற்று அதிகம் மோசமானவனாகத்தான் இருப்பான்.

"எழுந்திருங்கள்,விழித்துக் கொள்ளுங்கள் இனியும் தூங்க வேண்டாம் எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது. இதை நம்புங்கள் அப்போது அந்தப் பெரிய சக்தி உங்களிடமிருந்து வெளிப்படும்" என்ற இந்த உண்மையை அனைவருக்கும் சென்று போதிப்பாயாக... எல்லையற்ற வலிமையும், எல்லலையற்ற ஞானமும், வெல்ல முடியாத ஆற்றலும் உனக்குள்ளேயே குடிகொண்டிருப்பதை நீ உணர முடிந்தால் நீ அந்த ஆற்றலை வெளியே கொண்டுவர முடியுமானால் நீயும் என்னைப்போல் ஆக முடியும்.

# மின்சாரத்தை சிக்கனப்படுத்துவதற்கு சிறந்ததோர் சாதனம் Induction Cooker

21ஆம் நூற்றாண்டில் நவீன விஞ்ஞான உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். மனித உழைப்பின் மூலம் வேலை செய்த காலம் மாறி இருந்த இடத்திலிருந்து கொண்டே இயந்திர சாதனங்கள் மூலம் மிக இலகுவாக நினைத்தவுடன் வேலையை செய்து முடிக்கும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து விட்டது.

போக்குவரத்து, தொடர்பாடல் என சகல துறைகளிலும் விஞ்ஞானம் துரித கதியில் வளர்ச்சியடைந்தாலும், சமையல் சாதனங்களைப் பொறுத்தவரையில் மெதுவான வளர்ச்சிதான் காணப்படுகின்றது.

எமது பெண்கள் சமையல் செய்வதற்குத் தயங்குவதற்கான காரணமே அதிகளவு நேரம் சமையலுக்கு செலவாகும் என்பது தான். மற்றைய காரணம் சமையலறைக்குச் சென்றால் புகை, கரி என்பவற்றின் பிரச்சினை. இவை எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு பெண்களின் சமையலை இலகு வாக்குவதற்கும் அவர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காகவும் அறிமுகமாகியிருக்கும் புதியதோர் சமையல் சாதனம் தான் Induction Cooker



இக் Cooker முக்கியமாக வடிவமைக் கப்பட்டது மின்சாரத்தைச் சிக்கனப்படுத்து வதற்காகவும், நேரத்தை மிச்சப்படுத்து வதற்காகவும் தான்.

இச்சாதனம் கிடைக்கும் மின்சார சக்தியை மின்காந்த சக்தியாக மாற்றியே தொழிற் படுகின்றது. இதனுள் செப்புச் சுருள் காணப்படுகின்றது. நாம் கொடுக்கும் மாறுபட்ட மின் சார ஓட்டம் செப்புச் சுருள்களின் ஊடாகச் செல்வ தால் செப்புச் சுருள் காந்தமாக்கப் படுகின்றது. காந்தமாக்கப்படும் செப்புச் சுருளிலிருந்து மின்காந்த அலைகள் உரு வாகின்றன. அந்த மின் காந்த அலைகள் Cooker இன் மேற்பகுதியில் உள்ள Ceramic தட்டி னூடாக மேலே வருகின்றன. அங்கு நாம் வைக்கும் பாத்திரம் தட்டுடன் தொடுகையில் உள்ளபோது அங்கு ஏற்படும் அதிர்வினால் பாத்திரத்தின் அடிப்பகுதி வெப்பமாக்கப்படு கின்றது. இங்கு Cooker இல் எவ்வித வெப்பமும் உருவாக்கப் படுவதில்லை.

பாத்திரத்தின் அடிப்பகுதியில் உருவாக்கப் படும் வெப்பமானது பாத்திரத்தினுள் உள்ள உணவுப் பதார்த்தத்திற்குக் கடத்தப்பட்டு உணவு சமைக்கப்படுகிறது.


இக் Cooker இல் வைப்பதற்கு நாம் பயன்படுத்தும் பாத்திரம் அடிப்பகுதி தட்டையானதாக இருக்க வேண்டும். அத்துடன் மின்

**விளம்பர விபரணம்**

காந்த அலைக்கு Support ஆகக்கூடிய பாத்திரமாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக Stainless Steel இரும்பு போன்றவற்றிலான பாத்திரங்களை பயன்படுத்தலாம். ஆனால் அலுமினியப் பாத்திரங்களை பயன்படுத்த முடியாது. இங்கு பயன் படுத்தும் பாத்திரங்கள் காந்தப் பாத்திரங்களாக இருக்க வேண்டும்.(Ferro Magnetive Pot.

இக் Cooker இல் வெப்பம் வீண் விரயம் ஆவதில்லை. பாத்திரத்தின் அடிப்பகுதியில் உருவாக்கப்படும் வெப்பம் முழுவதும் சமையலுக்கே உபயோகமாகின்றது. 10% ஆன வெப்பம் தான் சூழலுக்கு இழக்கப்படுகின்றது. ஆனால் விறகு அடுப்பிலோ , மண்ணெண்ணெய் அடுப்பிலோ அதிகளவான வெப்பம் சூழலுக்கு இழக்கப்படுகிறது.

எனவே நாம் இக் Cooker ஐப் பயன் படுத்துவோமானால் சூழலையும் பாதுகாப்பதாய் அமைகின்றது. சூழல் வெப்ப மேறுவது குறைக்கப் படுகின்றது.



இக் Cooker இல் தீ , மின் அபாய மில்லை. Cooker இன் வெளிப் பகுதி மின் னைக் கடத் தாத பதார்த்தத்தால் ஆக்கப்பட் டுள்ளது. அதனால் இங்கு மின் அபாயமே கிடையாது.

அத்துடன் தீ அபாயம் கூட இல்லை. Cooker இல் வெப்பம் கூட ஏற் படாது .

எனவே துணிவு டன் கையாளலாம். சிறுவர் முதல் பெரியோர் வரை இலகுவாகவும் துணிவுடனும் கையாளலாம். இங்கு பாத்திரங்கள் கரிப் பிடிக்காது. Cooker இன் மேற்பகுதியில் எந்தளவு வெப்ப நிலையில் கூட உணவுப் பதார்த்தங்கள் பொங்கி வழிந்தாலும் சேதம் ஏதும் ஏற்படாது. அதற்கேற்ற வகையில் அதன் panel வடி வமைக்கப்பட்டுள்ளது.

இக் Cooker குறைந்தளவு மின்சார சக்தியையே பயன்படுத்துகின்றது. அத்துடன் மிகவும் வேகமானது. குறைந்த நேரத்திலேயே அதிகளவு சமையலை செய்து முடித்து விடலாம். நாம் எமக்குத் தேவையான அளவில் Cooker இன் வெப்பநிலையை மாற்றியமைக்கலாம். Cooker பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவை (watt) எமது தேவைக்கேற்றவாறு மாற்றலாம்.

அத்துடன் இக் Cooker ஐப் பயன் படுத்தும் போது எத்தனை Unit மின்சாரம் செலவழிகின்றது. என்பதை Cooker இல் காணப்படும் ஓர் ஆளியைப் பயன்படுத்தி அறிந்து கொள்ள லாம்.

இக் Cooker Water, Milk.Rice, Soup போன்ற சில தன்னியக்க ஆளிகளை கொண்டமைந்துள்ளது. இவற்றைப் பயன் படுத்தி எமக்கு தேவையானவற்றை Automatic ஆகவே சமையல் செய்யலாம். நாம் பால் காய்ச்ச வேண்டுமானால் பாலைப் பாத்திரத்தில் இட்டு Cooker இல் வைத்து விட்டு Cooker ஐ on செய்து Milk என்ற Button ஐ அழுத்தி விட்டால் பால் கொதித்தவுடன் Cooker தானாக off ஆகிவிடும். இல்லாவிடில் எமது தேவைக்கேற்றவாறு Time Button ஐயும் பாவிக்கலாம்.

எமது சமைய லுக்கு எவ்வளவு நேரம் தேவை என்பதை Set செய்து விட்டால் குறிப்பிட்ட நேரம் முடிய Cooker off ஆகிவிடும்.

எனவே நாம் அருகில் இருக்கவேண்டிய கட்டாயம் இல்லை.

இக் Cooker இல் நாம் காலையில் சமைத்த உணவை எந்நேரமும் சூடாக வைத்திருக்கக்கூடிய வசதியும் உள்ளது.

**தொகுப்பு-அ.ஜனார்த்**

அத்துடன் சீரில்லாத மின்சாரம் காணப் படும் இடத்து Cooker off ஆகிவிடும்.

அளவில் மிகச் சிறியதாய் இருப்பதனால் இக் Cooker ஐ நாம் எம்முடனேயே எடுத்துச் செல்லலாம். இதைப் பயன்படுத் துவதற்குப் பிரத்தியேகமான இடம் தேவையில்லை. எவ் விடத்திலும் வைத்துப் பயன் படுத்த முடியும்.


கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின்

நல்வாழ்த்துக்களும் நன்றி நவிலலும்

திரு.ச.லலீசன் அவர்கள்

(B.A.(Hons), P.G.D.E., M.A. (Tamil), M.Ed. S.L.P.S.2-II, S.L.T.E.S.-III)



கடந்த மூன்று ஆண்டுகளாக எமது பாடசாலையின் அதிபராக அருஞ்சேவையாற்றிப் பாடசாலை வளர்ச்சியில் பல திருப்பங்களை ஏற்படுத்திய நமது அதிபர் அவர்கள் இலங்கைக் கல்வியாளர் சேவை நியமனம் பெற்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகப் பதவியேற்றமையையிட்டு எமது நல்வாழ்த்துக்ளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவர் மேலும் வளர்ச்சிகள் காண அன்னை மரியாளின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை, கோப்பாய்

உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(4140)


# பயங்கரவாத சந்தேக நபர்கள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாத சந்தேக நபர்கள் மீதான விசாரணைகளை துரிதப் படுத்துமாறு அரச சட்டத் தரணிகளுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமது அடிப்படை உரிமை மீறப் பட்டுள்ளதாக தெரிவித்து பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தாக்கல் செய்த மனுவை பரிசீலணை செய்த பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையிலான நீதவான் குழுவினர் இந்த உத்தரவைப் பிறப் பித்துள்ளனர்.

பயங்கரவாத சந்தேக நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் அல்லது அவர்களை விடுதலை செய்ய வேண்டு மென உயர் நீதிமன்றம் சுட்டிக்காட் டியுள்ளது.

சிவலிங்கம், விவேகானந்தா இராச மாணிக்கம், ராமன்குமார் மற்றும் கந்தசாமி புஷ்பராஜ் ஆகியோர் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் பயங்கரவாத சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள னர்.

காவல்த்துறைமா அதிபர்,பாதுகாப்புச் செயலாளர் சட்டமா அதிபர் மற்றும் காவல்துறை விசாரணைப் பிரிவு பணிப்பாளர் ஆகியோர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளனர்.

விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதாக அரச தரப்பு சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள் ளார்.

இதேவேளை கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் களில் ஒருவரிடம் பலவந்தமாக அறிக்கையில் கையொப்பம் பெற் றுக்கொள்ளப்பட்டுள்ளதாக மனு வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காவல்துறையினர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தர வுகளுக்கு அமைய செயற்பட வேண்டும் என நீதவான் காமினி அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் குறித்த சந்தேக நபர்கள் தொடர்பிலான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (6)

## மாவட்ட மீளாய்வுக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள், சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களினால் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப் படும் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் கௌரவ வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் யாழ். மாவட்ட செயலக அரசாங்க அதிபர் கூட்ட மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10.30மணிக்கு நடைபெற வுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட் டுக்கொள்ளப்படுகின்றனர். (6-4)

# இலங்கை இன்னிங்ஸால் தோல்வி; இந்திய அணி தொடரை சுவீகரித்தது

(மும்பை)

மூன்றாவது டெஸ்டில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் இலங்கை அணியை வீழ்த்தி தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இதன் மூலம் ஐ.சி.சி.டெஸ்ட் சிறந்த




அணிகள் தர வரிசையிலும் முதல் முறையாக முதலிடத்தைப் பிடித்து இந்திய அணி சாதனை படைத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் ,2 இருபது -20 மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சமனிலையில் முடிபடைய இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 2ஆம் திகதி மும்பையில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 393 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 726 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 333 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிபில் 6 விக்கெட்டுகளை இழந்து 276 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 5 ஆவதும் இறுதீ நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 2 ஆவது இன்னிங்ஸில் 309 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களை யுமிழந்து இன்னிங்ஸ் மற்றும் 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதில் சங்கக்கார 261 பந்துகளில்( 20 பவுண்டரிகள் ,ஒரு சிக்ஸர் உட்பட) 137 ஓட்டங்களையும் குலசேகர 19 ஓட்டங் களையும் முரளிதரன் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சகீர்கான் 5 விக் கெட்டுகளையும் ஹர்பஜன் சிங் ,பிரக்ஜன் ஓஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சிறிசாந் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் சுவீகரித்தது.

**சேவாக் முதலிடம்**

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சேவாக்கின் ஆட்டம் மிகவும் அதிரடியாக இருந்தது. மும்பை டெஸ்டில் 293 ஓட்டங்கள் எடுத்தார். இந்த தொடரில் சேவாக் 491 ஓட்டங்களை குவித்து (3 டெஸ்டில் 4 இன்னிங்ஸ்) முதல் இடத்தை பிடித்தார். இதில் ஒரு இரட்டை சதம், ஒரு சதம் அடங்கும். சராசரி 108.14 ஆகும். ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது அவருக்கு கிடைத்தது.

டிராவிட் 433 ஓட்டங்கள் குவித்து (2சதம்) 2-வது இடத்தை பிடித்தார். இலங்கை முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 373 ஓட்டங்களையும் பிரசன்ன ஜெயவர்த்தன 297 ஓட்டங்களையும் காம்பீர் 282 ஓட்டங்களையும் (2 டெஸ்ட்) எடுத்தனர். இலங்கை அணித்தலைவர் சங்கக்கர 241 ஓட்டங்களையும் (1 சதம்), இந்திய அணித் தலைவர் தோனி 214 ஓட்டங்களையும் (2 சதம்) எடுத்தனர்.

பந்து வீச்சாளர்களில் ஹர்பஜன்சிங் முதலிடத்தை பிடித்தார். அவர் 3 டெஸ்டில் 13 விக்கெட் கைப்பற்றினார். 112 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட் எடுத்தது அவரது சிறப்பான பந்து வீச்சு ஆகும். இலங்கை வீரர் ஹேரத் 11விக்கெட் கைப் பற்றி 2-வது இடத்தை பிடித்தார்.

சகீர்கான் 10 விக்கெட் கைப்பற்றினார். 72 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட் கைப்பற்றியது அவரது சிறந்த பந்துவீச்சு ஆகும். ஓஜா, முரளிதரன் தலா 9 விக்கெட்டும், சிறிசாந்த் 8 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.




இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதன் மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் தர வரிசைப்பட்டியலில் இந்தியா முதல் முறையாக முதல் இடத்தை பிடித்து சாதனை படைத்தது. இந்தியா 122 புள்ளிகளுடன் முதலிடத்திலும் தென்னாபிரிக்கா 2-வது இடத்திலும், 116 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா 3-வது இடத்திலும் உள்ளன.

77 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய அணி டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது. தற்போது டோனி தலைமையில் தான் முதல் இடத்தை பிடிக்க முடிந்தது. 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியா தரவரிசையில் 5-வது இடத்தில் இருந்தது. 2 ஆண்டில் மிகுந்த முன்னேற்றம் அடைந்து நம்பர் 1 இடத்தை பிடித்துள்ளது.

**தோனி தலைமையில் 7-வது வெற்றி**

தோனி தலைமையில் இந்தியா 7ஆவது வெற்றியை (பத்து டெஸ்ட்களில் விளையாடி) பெற்றது.முதல் 4 டெஸ்ட்டில் வென்ற இந்திய அணித் தலைவர் என்ற பெருமையை ஏற்கனவே அவர் பெற்றார்.

அவர் தலைமையில் இந்திய அணி டெஸ்டில் இதுவரை தோல்வியைச் சந்திக்கவில்லை. டெஸ்ட் போட்டியில் இந்தியா பெற்ற 101 ஆவது வெற்றியாகும். இலங்கைக்கு எதிராக 13ஆவது வெற்றி கிடைத்தது.

தொடர்ந்து 2 ஆவது இன்னிங்ஸ் வெற்றி இந்தியாவுக்கு கிடைத்தது.கான்பூர் டெஸ்டில் இன்னிங்ஸ் 144 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று இருந்தது.1986-87 மற்றும் 1994 தொடர்களில் இந்திய அணி இலங்கைக்கு எதிராக தொடர்ந்து 3 ஆவது முறை இன்னிங்ஸ் வெற்றி பெற்று இருந்தது. இலங்கைக்கு எதிராக இந்தியா பெற்ற 10 ஆவது இன்னிங்ஸ் வெற்றியாகும். சகீர்கான் 72 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்டை கைப் பற்றினார்.அவர் 8 ஆவது முறையாக ஒரு இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

மும்பையில் பிராபோர்ன் மைதானத்தில் கிடைத்த 5ஆவது (18 டெஸ்ட்)வெற்றியாகும்.

# இரண்டாவது டெஸ்டில் நியூசிலாந்து தோல்வி

(வெலிங்டன்)


நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணி 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுதொடரை சமன் செய்தது.

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதிய 2-வது டெஸ்ட் வெலிங்டனில் நடந்தது. இதில் பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 264 ஓட்டங்களையும் நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 99 ஓட்டங்களையும் எடுத்தன.

பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்சில் 239 ஓட்டங்கள் எடுத்தது. இதனால் நியூசிலாந்துக்கு 405 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. 3-வது நாள் ஆட்ட நேர முடிபில் நியூசிலாந்து 3 விக்கெட் இழப்புக்கு 70 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

இந்நிலையில் 4-வது நாள் ஆட்டம் நேற்று நடத்தது. இதில் தொடர்ந்து விளையாடிய நியூசிலாந்து 263 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் 141 ஓட்டங்கள் வித்தியாசத்தில்



பாகிஸ்தான் அபார வெற்றி பெற்றது. ரெயிலர் சதத்தை தவறவிட்டார். அவர் 97 ஓட்டங்களையும் அணித் தலைவர் விக்டோரி 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் முகமது ஆசிப் 5 விக்கெட்டுக்களையும் கனேரியா 3 விக்கெட்டுக்களையும் முகமது அமீர் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்த வெற்றி மூலம் 3 டெஸ்ட் போட்டி கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

முதல் டெஸ்ட்டில் நியுசிலாந்து வெற்றி பெற்றமை குறிப்பிடத்தகது.

## யாழில் அடுத்த மாதம் தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையும் லேக் ஹவுஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள் எதிர்வரும் ஜனவரி 15,16ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்ட்ரங்கில் நடைபெறுவுள்ளன.

இதில் தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகளான மயிலாட்டம், காவடியாட்டம், கோலாட்டம், சிந்து நடைக்கூத்து என பல்வேறு கலை நிகழ்வுகளும் மாட்டுவண்டிச் சவாரி உட்பட்ட பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளன. (ந-5,14)



வட்டுக்கோட்டை பொலிஸாரினால் நடத்தப்பட்ட இலவசமருத்துவ முகாமினை யாழ்ப்பாணக்கல்லூரி முதல்வர் என்.ஏ. விமலேந்திரன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் யாழ். மாவட்ட உதவி பொலிஸ்அத்தியட்சகர் நிமால் ரஞ்சித் மெண்டிஸ், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எஸ்.டர்சன ஆகியோர் உரையாற்றுவதையும் வைத்திய கலாநிதி டாக்டர் காந்தநேசன் வைத்திய பரிசோதனை மேற்கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள்:வட்டு அஜித்

# ஊடகங்களை தவறானமுறையில் பயன்படுத்தப் போவதில்லை

## அலுவலகத் திறப்பு விழாவில் சரத் பொன்சேகா

(கொழும்பு)

தனக்கு எதிரான அரசியல்வாதிகளால் அரச ஊடகங்கள் தவறான முறையில் பயன் படுத்தப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தான் ஜனாதிபதி தேர்தலில் பொது ஊடகங்களை தவறான முறையில் பயன் படுத்தப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாக கொழும்பில் நேற்று ஊடக மத்திய நிலையமொன்று திறந்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் இலங்கையின் தேர்தல் வரலாற்றிலேயே எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இடம் பெறாத வண்ணம் ஊடக சுதந்திரம் வழங் கப்பட்டு சாதாரண ஒரு தேர்தல் நடத்துவதே தனது எதிர்பார்ப்பு எனக் கூறினார்.

அதற்காக ஊடகவியலாளர்கள் ஆகிய உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பும் தமக்குக் கிடைக்கும் என தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

தற்போதுநடைமுறையில் உள்ள ஊட கங்கள் எந்தளவிற்கு மட்டமாக கீழ்த்தரமாக நடத்தப்படுகின்றது என்பதனை ஊடகவிய லாளர்களாகிய நீங்கள் நன்கு உணர்வீர்கள் எனத் தெரிவித்த அவர்,

தனக்கு எதிராக செயற் படுகின்ற அரசியல் தலைவர்கள் அரச ஊடகங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு அதில் நேரடியாக நிகழ்ச் சிகளைத் தயாரித்து தனக்கும் ஒரு எதிர்காலச் செயற்பாட்டிற் கும் எதிரா க சேறுபூசும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கூறினார்.

ஊடக சுதந்திரம் தொடர்பில் கதைக்கின்றவர்கள் இன்று ஊடக சுதந்திரம் பறிக்கப்பட் டுள்ளதை மறந்து செயற்படுவதாகவும் தான் எப்போதும் ஊடகசுதந்திரத்தை மதிப்பதாகவும் கூறினார். நேற்று முற்பகல் 11.30மணி யளவில் இடம் பெற்ற இந்த வைபவத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், திஸ்ஸ அத்தநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரு ணாநாயக்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக் கள் பிரிவுத் தலைவர் மங்கள சமரவீர, ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அனுர குமார திஸாநாயக்க ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஊடக மத்திய நிலையத்தில் ஊடகப் பேச்சாளராக அனுரகு மார திஸாநாயக்க மற்றும் மங்கள சமர வீர ஆகியோர் செயற் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (ந-5)

## ஜெனரல் சரத் பொன்சேகாவுடன்...

சாவடியை கடந்து பிரயா ணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதி இப்போது நீக்கப்பட்டி ருக்கிறது.

பயணிகள் போக்குவரத்துக் கான பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களும் இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாமல் இந்த சோதனைச் சாவடி ஊடாக பிரயாணம் செய்வதற்கு அனுமதி வழங் கப்பட்டிருக்கிறது.

ஆனால் வாகனங்களும் பயணிகளும் வழமை போல் இங்கு சோதனையிடப்படும்.

எனினும் யாழ்ப் பாணத்துக்குச் செல்லும் வாகனங் களுக்கான நடைமுறையில் இன்னும் மாற்றங்கள் எதுவும் ஏற்படுத் தப்படவில்லை.

ஓமந்தை சோதனைச் சாவ்டி ஊடாக வடக்கு நோக்கிச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப் பாணத்துக்குச் செல்லும் வாகனங்கள் தொட ரணியாக இராணுவத்தின் வழித்துணையுடன் செல்ல வேண்டும் என்ற நடைமுறை இருந்து வருகின்றது. இதில் எந்த மாற்றமும் கிடையாது என இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார். (ந-5,3)

## செல்வந்தக் குடும்பமாகு...

தளபதியாகவோ அந்த சேவைகளை வழங்க முடியாது. யுத்த வெற்றி இந்த நாட்டின் சகல மக்களுக்கும் உரிமையானது.

கடந்தகாலங்களில் ஆட்சி வகித்த சகல ஆட்சியாளர்களும் பயங்கரவாதத்தை இல்லா தொழிக்க அர்ப் பணிப்புடன் போராடிய போதிலும் இராணுவத்தினர் சில நேரங்களில் பின்வாங்க நேரிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்துத் தலைவர்களும் நாட்டை மீட்டெடுப்பதற்கான யதார்த்த பூர்வ மான முனைப்புடன் செயற்பட்டதாக சுட்டிக் காட்டிய அவர் இதற்கு முன்னர் பயங்கரவாதிகளை படையினர் நெருங்கவில்லையெனவும் அதனால் சர்வதேச ரீதியில் எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக் கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

யுத்த வெற்றியின் பின்னர் ஓர் தனிப் பட்ட அரசியல் கட்சி யுத்த வெற்றியை தனது குறுகிய அரசியல் நோக்கங் களுக்காக பயன்படுத்தியது. கட்டம் கட்டமாக யுத்தத்தைக் காட்டியே தேர்தல் களில் ஆளும் கட்சி வெற்றியீட்டியது.

நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற் படுத்தும் வகையில் ஆட்சி நடத்துவதே தமது பிரதான இலக்கு எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## சரத் பொன்...

ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறுபான்மை மக்கள் தொடர்பில் ஜெனரல் சரத் பொன்சேகா கொண்டுள்ள நிலைப்பாட்டை மக்களுக்குத் தொடர்ந்து வெளிப்படுத்துவோம் என்றும் ஹக்கீம் தெரிவித்தார். (ந-5)

## ஜனாதிபதித்...

நாடுகள் அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய தேர்தல் கண் காணிப்பு குழு உள்ளிட்ட நான்கு குழுக்கள் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ள தாகத் தெரிவிக்கப் படுகிறது. (ந-5)

## நிதி சேகரிப்பவர்கள் பற்றி...

உணவளிப்பதற்கென்றும் கூறி பொது மக்களிடமிருந்து வற்புறுத்தி பணம் சேகரித்திருப்பது தெரியவந் துள்ளது.

சில சந்தர்ப்பங்களில் பணம் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச் சீட்டும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நபர்கள் தமிழில் உரையாடும் போது சிங்களவர்கள் தமிழ் கதைப்பது போன்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எவ்வாறெனினும் யாழ். குடாநாட்டிற்குள் ஊனமுற்ற படைவீரர்களுக்காக நிதி சேகரிப் பதற்கு யாழ். பாதுகாப்பு படைகளின் தலைமையகத்தால் யாருக்கும் அனுமதி வழங் கப் படவில்லை என்பதை அறியத் தருவதுடன் இவ்வாறு நிதி சேகரிப் பதற்காக வருவோர் மற்றும் பல வந் தப்படுத்தி நிதி மற்றும் பொருள் களை சேகரிப்போரை சட்டத்தின் முன் நிறுத் துவதற்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு கேட்டுக் கொள்வதாக 51ஆவது படையணி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## மதவாச்சியூடாக செல்ல...

சாவடியை கடந்து பிரயாணம் செய் வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்ற விதி இப்போது நீக்கப்பட்டிருக்கிறது.

பயணிகள் போக்குவரத்துக் கான பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களும் இனிமேல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாமல் இந்த சோதனைச் சாவடி ஊடாக பிரயாணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் வாகனங்களும் பயணிகளும் வழமை போல் இங்கு சோதனையிடப்படும்.

எனினும் யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வாகனங்களுக்கான நடைமுறையில் இன்னும் மாற்றங்கள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வடக்கு நோக்கிச் செல்லும் வாகனங்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப் பாணத்துக்குச் செல்லும் வாகனங்கள் தொட ரணியாக இராணுவத்தின் வழித்துணையுடன் செல்ல வேண்டும் என்ற நடைமுறை இருந்து வருகின்றது.

இதில் எந்தமாற்றமும் கிடையாது என இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். (ந-5,3)

## ஐக்கிய தேசிய கட்சிக்குள்...

இவ்வாறான ஒரு நிலைமையில் எஸ்.பி.திஸாநாயக்க ஜனாதிபதியைச் சந்தித்தமை ஐக்கிய தேசிய கட்சிக்குள்ளே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்திலேயே எஸ்.பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் இடம்பெற்ற மாநாட்டிலும் கலந்து கொள்ளவில்லை.

இது குறித்து நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க,

எஸ்.பி.திஸாநாயக்க சுகவீனம் காரணமாகவே வரவில்லை எனவும் நேற்று அவர் தன்னுடன் தொலைபேசியில் உரையாடிய தாகவும் கூறினார்.

இந்நிலையில் ஜனாதிபதியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பை தொடர்ந்து எஸ்.பி.திஸாநாயக்க இன்று ஊடகவியலாளர் சந்திப் பொன்றை நடத்தலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது அவர் ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்தின் பக்கம் தாவும் வாய்ப்புள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


அன்புக்கினிய வாசகர்களே!
வலம்புரியுடன் இணைந்து உங்கள் அபிமானத்திற்குரிய

**சங்கு நாதம்**

ஞாயிறு தோறும் வெளிவரும்.

- அரசியல் களம்
- ஆலடி மாநாடு
- வியாசர் பதில்
- கவிதை மழை
- அறிவியல் சிந்தனைகள்

உங்கள் ஆக்கங்களை: 'சங்குநாதம்'
இல.3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

யாழ். நகர மையத்தை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
விளம்பர இல:1000
மே/பா. வலம்புரி
இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**மத்திய வங்கியின் வங்கி உதவியாளர் (பயிலுநர்)போட்டிப் பரீட்சை வகுப்பு**

திங்கள் முதல் வெள்ளி வரை
2.30 தொடக்கம்
5.00 மணி வரை
ஆரம்பம் :திங்கள்
(07.12.2009)
2.30 மணி
(4146)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவுயாழ். போதனாவைத்திய சாலை அரு காமையில்

**பொருளியல் K.பிரதீபன்(BBA)**

A/L Day Class
நடைபெறுகின்றது
NEW SCIENCE HALL
யாழ்நகர்
Mon-Fri 6.30 am

AAC அரியாலை
NCA இணுவில்

அலுவலகத்தில்
Sat, Sun
3-5 pm
(4145)




**வடமராட்சியில்...**

முற்றிலும் புதிய அணுகு முறையில்...
(அலகு ரீதியில்)

**கணக்கீடு**

A/L 2010, 2011 பிரிவு மாணவர்களுக்கான விசேட பிரத்தியேக பிரிவு

2ஆவது பிரிவு ஆரம்பம்-10.12.2009

(அலகு- கட்டுப்பாட்டுக் கணக்குகள்)

ஆசிரியர்: B.Krishnajothy
(B.Com (Hons), Dip.in Edu.,M.Ed)

நேர சூசிகையை அலுவலகத்தில் 09ஆம் திகதி பெற்றுக்கொள்ளவும்.

- தெளிவான பரந்துபட்ட விளக்கம்
- அச்சடித்த விளக்கக் குறிப்புக்கள்

வாராந்த வழிப்படுத்தல் பரீட்சைகள்

அனுமதிக்கு:
OXFORD ENGLISH ACADEMY
P.K.Lane. Point Pedro

1 ஆவது பிரிவுக்கு 'ஒற்றைப்பதிவு' ஆரம்பமாகவுள்ளது

(C-3860)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.